செந்தமிழ்

தொகுதி 89 செப்டெம்பர் 95 பகுதி 3

காலாண்டு இதழ்

ஆசிரியர் மா. தனுக்கோடி பாண்டியன் பி.ஏ.,பி.எல்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1.

பொறுப்பாசிரியர் : பேராசிரியர் பேரறிஞர்

நா. பாலுசாமி எம்.ஏ.,பி.எல்.,எம்.லிட்.,பிஎச்.டி.,எம்.எட்.,

பொருளடக்கம்

பக்கம்

1. யாமுறுப்புக்கள் — 1
பேரறிஞர் வா.கோ. கிருஷ்ணமூர்த்தி

2. அப்பர் அடிச்சுவட்டில் பொருளாதாரச் சமநிலை — 15
பேரறிஞர் தா. ஈசுவர பிள்ளை

3. செந்தமிழ் இலக்கணமும் தொன்னூல் விளக்கமும் — 22
பேரறிஞர் செ. சுயம்பு

4. வழக்கொழிந்த பழைய கலைச் சொற்கள் — 35
பேரறிஞர் சா. கிருஷ்ணமூர்த்தி

5. மறந்துபோன தமிழ் எழுத்துக் குறியீட்டுப் பெயர்கள் — 40
பேரறிஞர் எஸ். சௌந்தரபாண்டியன்

6. எல்லோர்க்கும் தொல்காப்பியம் — 44
பேரறிஞர் நா. பாலுசாமி

யாழுறுப்புக்கள்

—பேரறிஞர் வா.கோ. கிருஷ்ணமூர்த்தி

இசைக்கு இலக்கியமென்றும் இலக்கணம் என்றும் இருவிரி குணப்பகுதிகளுண்டு. மிடற்றிசை இலக்கிய இசையென்றும் கருவியிசை இலக்கண இசையென்றும் கூறப்படும். இசையிலக்கணம் கருவியின் மூலமாகவே செயல்முறைப்படுத்தி விளக்கப்பட முடியுமாதலால் இசையிலக்கண ஆராய்ச்சியில் ஈடுபடுவோர் கருவிகளின், குறிப்பாக குழல், யாழ் ஆகிய கருவிகளின், உறுப்புக்கள், உருவம், செயற்பாடு ஆகியவை பற்றி அறிதல் இன்றியமையாததாகும். கருவிகளிலெல்லாம் முதலாய்த் தோன்றிய குழலின் மூலம் இசையிலக்கணத்தை விளக்க முயன்ற நம் முன்னோர் இவ்வொலிக் கலையின் இலக்கணத்தை விளக்க முடியாதவாறு குழலுக்குச் சில குறைபாடுகள் (limitations) உள்ளதையறிந்து பின்னர் யாழின் மூலம் இசையிலக்கணத்தை விளக்கினர். இதன் காரணமாகவே பண்டை நூல்களிலும், பிற்கால நூல்களிலும் இசையொலி பற்றிய அடிப்படைக் கருத்துக்களும் (fundamental / basic concepts) இசையிலக்கணம் பற்றிய முற்பட்ட கருத்துக்களும் (advanced theories of music Grammar) யாழின் மூலமாக விளக்கப்பட்டது மட்டுமல்லாது இவ்வியாழானது இலக்கணம் காட்டும் கருவி (லக்ஷண வாத்தியம்) என்றும் அழைக்கப்பட்டது. என்று சீர்மையும நீர்மையும் அடைந்த இசையிலக்கணம் யாழின் மூலம் விளக்கப்பட்டதோ அன்றே இசையிலக்கணக்கூறுகள் அனைத்தும்யாழின் மூலம் விளக்கப்படுமளவிற்கு யாழ்க்கருவி உருவிலும், உறுப்புக்களின் செயற்பாட்டிலும் முழுமை பெற்றிருந்தது என்பது உறுதியாகின்றது. ஆயின் யாழின் உருவம், உறுப்புக்களினமைப்பு, அவற்றின் செயற்பாடு ஆகியவை பற்றிய மாறுபாடான கருத்துக்களும் அதனால் குழப்ப நிலையும் இன்றும் அறிஞர்களிடையே நிலவி வருகின்றது. யாழுறுப்புக்களின் விளக்கங்களைக் கொண்டு அவற்றின் தனித்தனி உருவங்களையும், அதன் மூலம் யாழின் மொத்த உருவத்தையும், அவ்வியாழின் செயற்றிறனையும் அறிவது சாலச் சிறந்ததாகும்,

யாழுறுப்புக்கள் பல இருப்பினும் அவற்றுள் இசையொலியினை எழுப்பி அவ்வொலியினை இசையாகத் தொடுப்பதற்கு இன்றியமையாத உறுப்புக்கள் சிலவே. இவ்வுறுப்புக்கள் வெவ்வேறு பெயர்களுடன் வழங்கப்பட்டுள்ளன. இவ்வுறுப்புக்களும் அவற்றின் செயற்றிறனும் பண்டை நூல்களில்நன்கு விளக்கப்பட்டிருப்பினும் ஒருறுப்பைப் பிறிதொன்று போல் இக்காலத்தவர் கொண்டதாலும் யாழின் மொத்த உருவம் பற்றிய தவறானதோர் கருத்து வேரூன்றி விட்டதாலும் இசையெழுப்புவதற்கு இன்றியமையாத சில உறுப்புக்கள் யாழில் இல்லை என முன் முடிவு செய்யப்பட்டு அம்முடிவுகள் மற்ற உறுப்புக்கள் யாவை என்பதை அறிவதிலும் தடையையும் குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இக்குழப்பங்களைக் களைவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நூல்களிற் கூறிய யாழுறுப்புக்களின் விளக்கங்களைச் சொல்லுக்குச் சொல் ஆராய்ந்து அவை கூறப்பட்ட இடம் (context) நோக்கிப் பொருத்திப்பார்த்து யாழுறுப்புக்கள் பற்றி ''யாழும் யாழ்முரிப்பண்ணும்'' என்றதோர் கட்டுரைமுன்பு வெளியிடப்பட்டது (சென்னை சங்கீத அகடெமி ஜர்னல், 64:116-146, 1993). அக்கட்டுரையில் வெளியிடப்படாத சில செய்திகள் இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளன. ஆயினும தொடர்ச்சியும விளக்கமும் கருதி அக்கட்டுரையில் கூறப்பட்ட செய்திகள் இக்கட்டுரையிலும் கூற நேரிடின் அவை சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன. எனவே இக்கட்டுரை படிப்போர் யாழும் யாழ்முரிப்பண்ணும எனும் கட்டுரையையும் சேர்த்துப்படித்துக் கொள்வார்களாக.

யாழுறுப்புக்கள்

இசையொலி எழுப்பவும் அவற்றைத் தொகுத்து இசையாக இயக்கவும் இன்றியமையாததாகிய பத்தர், உந்தி, வறுவாய், மருப்பு, மாடகம், ஆவி, நரமபு, திவவு ஆகியவை பற்றி இங்கு விளக்குவோம். இவ்வின்றியமையாத உறுப்புக்கள் பற்றி முதலில் அறிவ்வாமாகில் மற்ற உறுப்புக்களின் விளக்கத்தின்படி அவற்றினுருவம் அவை யாழில் அமைந்திருந்த தோற்றமும அறியதற்கெளிதாகும்.

பத்தல்/பத்தர்

பத்தர் என்பது குடம் போன்ற உட்குழிவுள்ள (hollow)

யாழின் பிற்பகுதியிலமையும் உறுப்பு என்று யாழுறுப்புக்கள் பற்றி விளக்கிய அனைத்து ஆய்வாளர்களும் கூறியுள்ளனர்.

''குளப்பு வழியன்ன கவடுபடு பத்தல்''

— பொருநராற்றுப்படை, வரி.4

என்றதால் யாழுறுப்பு ஒன்றின் குழிவான பகுதி பத்தல் எனவும் அது (மான்) குளம்பின் தடம் போல் கவடுபட்டிருந்தது எனவும் விளக்கப்பட்டது.

இக்கவடுபட்ட பத்தலின் மேற்பகுதியில் பச்சையாகிய தோற் போர்வையை அமைக்க அம்மேற்பகுதி விளக்கழல் உருவில் காணப் பட்டது என்றும் கூறப்பட்டுள்ளது.

''விளக்கழல் உருவின் விசியுறு பச்சை''

—பொருநர், வரி.5

(விசியுறு-பக்கங்கள் புடைத்துத் தோன்றும்: பச்சை-தோல்.)

இப்பச்சையாகிய தோல் கவடுபட்ட, குழிவுடைய, விளக் கழல் போன்ற விளிம்பையுடைய, பத்தலின் மேற்புறத்தில் வைத்துக் கீழ்நோக்கிக் கொணரப்பட்டு நடுவே சேர்த்துத் தைக்கப்பட்ட போது அப்பத்தல் ''வயிறு சேர்பு ஒழுகிய வகையமை அகளம்'' (சிறுபாண் 224) ஆகிய பத்தர் எனும் உறுப்பாயிற்று என்க. எனவே தோலாற் போர்த்தியபின் உள்ளிடத்தைக் கொண்ட யாழ்ப்பத்தர் உரு அமையுமாறு ஆக்கப்பட்ட யாழ்ப்பத்தர்க்கூடு (Skeleton) குழிவுடைய பத்தல் எனப்பட்டது என்றறிக (படம் 1) இப்பத்தர்க்கூடு மூங்கிலால் ஆக்கப்பட்டது என்பது

''சிலப்பு அமை பத்தல் பசையொடு சேர்த்தி''

—மலைபடுகடாம். வரி 26

(சிலப்பு-மலை; அமை-மூங்கில்; பத்தல்-பத்தர்க்கூடு)
எனும் வரியினின்று அறியலாம்.

''கூடுகொள் இன்னியம்''

—சிறுபாணாற்றுப்படை, வரி 229

எனக் கூறப்பட்டதால் பத்தர்க்கூட்டினை அகத்தே கொண்டு மேலே தோற்போர்வையினால் போர்த்திய பத்தர் எனும் உறுப்பையுடைய இன்னியம் (நரம்பிசைக்கருவி) என்றவாறு பத்தல் விளக்கப்பட்டது காண்க.

பத்தர்க்கூடு (பத்தல்) கவடுபட்டுத் தோன்றிய காரணம் (தோற்போர்வை போர்த்தியபின்) பத்தரின் மேற்பகுதியில் யாழின் சில உறுப்புக்களை அமைப்பதற்கு ஆதாரமாகவும், அப்பத்தல் இரு சமமான பகுதிகளாகத் தோன்றுமாறும் பத்தலின் நீளவாட்டில் உந்தி எனும் பலகையும் அதன் மீது யாப்பு (ஆப்பு) எனும் உறுப்பும் (தோற்போர்வை போர்த்து முன்) அமைக்கப்பட்டதால் என்க. (படம் 2)

தோற்போர்வை போர்த்திய பின் யாழ்ப்பத்தரின் புறத் தோற்றத்தை விளக்கும் போது

> "யாழ்ப்பத்தர்ப் புறம் கடுப்ப, இழைவலந்த பல் துன்னத்து
> இடைப்புரை பற்றி பிணி விடாஅ. ஈர்க்குழாத்தொடு
> இவை கூர்ந்த ....."
>
> —புறநானூறு, 136 : 1-4

எனக் கூறப்பட்டுள்ளது.

(இழை-நூலிழை; வலந்த-உள் நீட்டியுள்ள; துன்னம்-துளை; இடைப்புரை-புரையின் உள்ளிடம்)

துணி நைந்ததால் ஏற்பட்ட சல்லடைக் கண்கள் போன்ற சிறு துளைகளின் உட்புறமாக நீட்டிக் கொண்டிருக்கும் அறுந்த நூலிழைகளின் நுனி போன்று, பேன் பிணியினால் பீடிக்கப்பட்டவனின் (தலையிலுள்ள) புண்களின் உட்புற விளிம்பினைச் சுற்றி ஒட்டியுள்ள ஈர்க்குழாத்தையுடைய யாழ்ப்பத்தரின் புறம்போல் தோன்றும் - தலை என்க.

இவ்வாறு பச்சையாகிய போர்வையை (போர்த்தப்பட்ட தோல்) பத்தர்க்கூடாகிய பத்தலின் மீது பொருத்தி பசையால் ஒட்டி அதன் பின்னர் பக்தர்க்கூட்டின் மீது போர்வை இறுக்கமாய்ப் பிணைந்து நிற்குமாறு அழகுபட அடிக்கப்பட்ட ஆணிகள் பேன் பிணி பிடித்தவனின் தலையிலுள்ள புண்களைச் சுற்றி ஒட்டியுள்ள ஈர்க்குழாத்திற்கு ஒப்பமைப்படுத்தப்பட்டது (படம் 3)

தலையின் மேற்பகுதி யாழ்ப்பத்தரோடு ஒப்புமைப்படுத்தப் பட்டதாலும், எய்யா இளஞ்சூல் செய்யோள் அவ்வயிற்று......, (பொருநராற்றுப்படை, வரி 6)- இளஞ்சூல் செய்யோள் வயிறு போல் சிறிதே புடைத்துக் தோன்றுகின்ற பத்தடீ என்ற பொருள்

படுமாறு கூறப்பட்டிருப்பதாலும் அக்கால யாழ்ப்பத்தர் இக்கால வீணையின் குடம் போல் அத்துணை ஆழமானதாக இல்லை என்றறியலாம்.

பத்தலை மூடியுள்ள போர்வை எங்கு இணைத்துத் தைக்கப் பட்டது என்பது

''எய்யா இளஞ்சூல் செய்யோள் அவ்வயிற்று
ஐதுமயிர் ஒழுகிய தோற்றம் போல''
பொருநராற்றுப்படை, வரி 6-7

(பத்தரின் கீழ்ப்பகுதியாகிய வயிற்றுப்பகுதியில் போர்வையின் விளிம்புகள் இழுக்கப்பட்டு நடுவாகத் தைக்கப்பட்டது இளஞ்சூல் நங்கையின் வயிற்றின் நடுவாக ஒழுங்குபட மயிர் செறிந்திருக்கும் தோற்றம் போலும்)

''வயிறு சேர்பு ஒழுகிய வகை அமை அகளம்''
—சிறுபாணாற்றுப்படை, வரி 224

(வயிற்றினிடமாக நெடுமையாக அமைந்த மயிர்ச்செறிவை) உடைய) முடிக்கப்பட்ட அகளமாகிய யாழ்ப்பத்தர்)
எனும் வரிகளில் விளக்கப்பட்டது.

எனவே பத்தரின் மேற்பகுதி மான்குளம்பின் தடம்போல கவடுபட்டும் (படம் 2) பச்சையாகிய தோல் போர்த்தியபின் விளக்கழல் உருவிலும் (படம் 4) கீழ்ப்பகுதி இளஞ்சூல் செய்யோன் வயிறு போல் சிறிதே புடைத்து நடுவே ஐது மயிர் ஒழுகிய தோற்றத் தோடும் (படம் 5,6) பத்தர் எனும் உறுப்பு இருந்தது என்க.

உந்தி

உந்தி எனும் உறுப்பின் விளக்கம் கூறும் போது
''அகடு சேர்பு பொருந்தி அளவினில் திரியாது
கவடுபட கவை இய சென்று வாங்கு உந்தி''
—மலைபடுகடாம், 33-34

எனப்பட்டது.

(அகடு - நடு. நடுநிலைமை; கவடுபட - பிரிந்து தோன்றும்; கவை இய - உள்ளிடப்பட்ட; சென்று - (கீழ்நோக்கிச்) செல்லச் செல்ல; வாங்கு-மெலிந்து தோன்றும்; உந்தி-உந்தித் தோன்றும் உறுப்பு (பத்தரின் மேல்தோல் மேலெழும்பித் தோன்றுமாறு அமையும் உறுப்பு) பக்தரின் உட்புறத்தை ஒரே அளவுள்ள இரு

பகுதிகளாக்குமாறு உட்புறமாகச் சேர்ந்து பொருந்துகின்ற, மேற்புறம் கவடுபட்டு விளங்கும், கீழ்ச் செல்லச் செல்ல மெலிந்து தோன்றும் பத்தரின் மேற்றோலை வெளிப்புறமாகச் சிறிது தள்ளித் தாங்கி நிற்கும் உந்தி (படம் 7 இ)

அரைக்கோள வடிவில் பத்தர் குடையப்பட்டிருந்தால்அதனுள் எவ்வாறு வேண்டுமானாலும் பொருந்துமாறு உந்தி அமையும் என்க. ஆயின் பத்தரின் உட்குழிவு எய்யா இளஞ்சூல் செய்யோள் வயிற்றின் உட்குழிவு போன்றும மேற்புறத்தலை (மண்டை ஓடு)யின் உட்குழிவு போன்றும் இருந்தது எனும் பொருள்பட முன்புவிளக்கி விட்டதால் பத்தர் நீண்ட அரைக்கோள உருவில் அல்லது நீள வாட்டில் படுக்கையாக (sagittal' அறுக்கப்பட்டமுட்டை யோடு போல் பத்தரின் உட்குழிவு தோன்றும் என்றும் அக்குழிவான பகுதி இரு சமமான பகுதிகளாகப்பிரிக்கப்பட வேண்டுமாயின் அத்தடுப்பு (உந்தி) பத்தரினுள் நடுவாகவும் நீளவாட்டில் செங்குத்தாகவும் (longitudinal) பொருந்துமாறு வைக்கப்பட வேண்டும் என்றும் அறிக. இவ்வாறு உந்தியும் அதன் மீது யாப்பும் பொருத்தப்பட்டிருந்ததால் பத்தலின் மேற்பகுதி போர்வை போர்த்துமுன் கவடுபட்ட மான்குளம்பின் தடம்போல் இருந்தது என முன்பு கூறப்பட்டது. இவ்வுந்தியின் மேற்பகுதி பத்தலை மூடியுள்ள மேற்புறப் பச்சையினை உட்புறமிருந்து மேல் நோக்கியும், உந்தியின் கீழ்ப்பகுதி ஐது மயிர் ஒழுகிய தோற்றத்தோடு இணைத்துத் தைக்கப்பட்டிருந்த வயிறு போன்ற கீழ்ப்பகுதியை உட்புறமிருந்து கீழ்நோக்கியும தாங்கி நின்றது எனக. உந்தியின் கவடுபட்ட பகுதியில் பொருந்துமாறு யாப்பு (ஆப்பு) எனும் உறுப்பு பச்சையின் மேல் அமையும் யாழின் நீள் நரம்புகளைத் தாங்கி நிற்பதற்கான உறுப்புக்களைப் பொருத்துவதற்காக அமைக்கப்பட்டது என்க. (படம் 7 அ. ஆ.இ)

வறுவாய்

வறுவாய் எனும் உறுப்பை விளக்கும்போது

''எண்ணாட்டிங்கள் வடிவிற்றாகி
அண்ணாவில்லா அமைவரு வறுவாய்''

—பொருநராற்றுப்படை, 11-12

என்றும்

''சுனைவறந்தன்ன இருள் தூங்கு வறுவாய்''

—பெரும்பாணாற்றுப்படை, 10

என்றும் கூறப்பட்டுள்ளது.

வறுவாய் என்பதே அதன் உருவம் சார்ந்த காரணப் பெயராகும்.

[வறு-முற்றுப்பெறாத (வறுதல்-முற்றுப்பெறாதிருத்தல்) வாய் - வாத்தியகுழல்]

முற்றுப்பெறாத குழல் என்றதால் அரைவட்ட வடிவக்குழல் (Semicylindrical or semicircular tube) எனக் குறிப்பிட்டதறிக. அரைவட்ட வடிவத்தோடிருந்ததால் ஒரு புறத்திணின்று நோக்க அது எண்ணாட்டிங்கள் வடிவத்திலும் குழல் என்றதால் இருமுனை தவிர மற்ற எல்லாப் பக்கங்களிலும் மூடப்பட்டிருந்தது. ஆகவே தட்டையான மேற்புறம் மேற்திறவாதது (அண்ணாவில்லாதது) என்றும் கூறப்பட்டது (படம் 8)

''சுனைவறந்தன்ன'' வறுவாய் எனக் கூறப்பட்டதால் இவ் வறுவாய் தடாகம்/குளம்/குட்டை போல் தேங்கி நிற்கும் நீர்ப்பகுதி வறண்டது போல எனக் கொள்ளப்பட்டு பத்தரின் குடையப்பட்ட பகுதி வறுவாய் எனப் பல ஆய்வாளர்களாலும் கூறப்பட்டது ஆயின் நீருற்றின் தேங்கி நிற்கும் நீர்ப்பகுதி மட்டுமல்லாது அவ்வூற்று நீர் வாய்க்கால் போல் வழிந்தோடும் பகுதியும் சுனை எனக் கூறப் பட்டுள்ளது. எனவே வறுவாய் என்பது சுனையின் ஓடும் நீர்ப் பகுதியாகிய நீண்ட வாய்க்கால் போன்ற (பாறை நெடுஞ்சுனை, குறிஞ்சிப்பாட்டு 187; நீள் சுனை வறப்ப, அகநானூறு, 295:1) உருவுடையது என்று எண்ணவேண்டியுள்ளது. பளிங்கு சொரிவு அன்னபாய் சுனைக்குடைவுழி (குறிஞ்சிப்பாட்டு:57;), கடிசுனை (பரிபாடல், 9:61; கலித்தொகை 45;2) என்ற வரிகளும சுனை என்பது ஓடும் நீரும் குறிக்கும் என்பதை விளக்குகின்றன (பாய் தல் ஓடுதல், நடத்தல்; குண்டம் பாய்தல்- தீக்குழியில் நடத்தல்: கடிசுனை-விரைவான நீரோட்டமுடைய சுனை)

''தடாகமேற்ற தண்சுனை''

—பரிபாடல், 9 : 77

என்றதால் தடாகமாக நிறைந்த நீரின் எதிராக (ஏற்ற-எதிர்ப் புறம்) சுனையாக வழிந்து ஓடும் நீர் எனப் பொருள்படுவது காண்க பாறையின் குழல் போன்ற குடைவு வழி இழியும் நீருற் சுனை எனப்பட்டது என்பது

''பளிங்கு சொரிவன்ன பாய் சுனைக்குடைவுழி''

—குறிஞ்சிப்பாட்டு

''குன்றக நெடுஞ்சுனை''

—ஐங்குறுநூறு, 500:2

என்று வரிகளினின்று கொள்ளலாம்

வறுவாய் என்பது அரைவட்ட வடிவக் (வாத்தியக்) குழல் என்றதாலும், இது சுனைவறந்தன்ன இருள் தூங்கும் யாழினுறுப்பு என்றதாலும், பாறையினுள்ளாக அமைந்து ஊற்று நீரைக்கடந்தும் (குழல் போன்ற) குடைவு சுனை என்றதாலும், அது இன்றைய வீணையின் தண்டியாகிய கோட்டுறுப்பு குறித்தது என்க. இன்றைய வீணையின் தண்டியாகிய கோட்டுறுப்பு அரைவட்ட வடிவ (எண்ணாட்டிங்கள் வடிவ) மேல்மூடியுள்ள (அண்ணாவில்லா) அதனால் இருள் தூங்குகின்ற நீரில்லா சுனை [வாய்க்கால்] போன்ற குழலாக அமைவது காண்க படம் 8]

மருப்பு

மருப்பு என்பது பிறைச்சந்திரனின் கோடு ஆகும். பிறைச் சந்திரனின் உருவுள்ள வறுவாயின் இருவிளிம்புகளும் உயர்ந்து தோன்றுமாறு அரைவட்டக் குழல் உருவிலுள்ள வறுவாயின் தட்டையான பகுதியின் இருபக்கங்களிலும் இணையாக நீளவாட்டில் பொருத்தப்பட்ட மரச்சட்டம் யாழின் மருப்பாயிறறு என்க. வறுவாய் என்பது மூடப்பட்ட வாய்க்கால் போன்றது என்றும் எண்ணாட்டிங்கள் வடிவானது என்றும் கூறப்பட்டிருப்பதால் வறுவாயின் இரு விளிம்புகளில் மரச்சட்டம் வைத்து உயர்த்தப்பட்டிருப்பதை

''பாம்பணந்தன்ன ஓங்கிரு மருப்பு''

—பொருநராற்றுப்படை, 13

ஆற்றின் கரைகள் உயர்த்தப்பட்டது போல் தோன்றுமாறு அமைக்கப்பட்ட இரு மருப்புக்கள் (பாம்பு-ஆற்றின் கரை) என விளக்கப் பட்டது.

''ஓங்கு இரு மருப்பு'' (ஓங்கு-உயர்ந்துள்ள)

பொருநராற்றுப்படை, 13

''மா இரு மருப்பு'' (மா-கருமையான)

பெரும்பாணாற்றுப்படை, 14

''வாங்கு இரு மருப்பு'' (வாங்கு-பக்கங்களிலமைந்த)

பதிற்றுப்பத்து, 66:1

என்று கூறப்பட்டிருப்பதால் மருப்பு இரண்டாகும், அது வறுவாயின் விளிம்புகளில் பிறைச்சந்திரனின் கோடுபோலும். ஆற்றின்கரை, உயர்த்தப்பட்டு போலும் இணையாக அமையும் எனக் குறிப்பிட்டது காண்க (படம் 9) வறுவாயின் வணர்ந்த பகுதி மீண்டும் சிறிது உயர்த்தப்பட்டது போல் மருப்பாகிய இம்மரச் சட்டம் அமைக்கப்பட்டதால்

',வணர்ந்து ஏந்து மருப்பு''

—மலைபடுகடாம், 37

(ஏந்து = ஓங்கு = உயர்ந்த)
எனறும் கூறப்பட்டது. (படம் 7, 8, 9)

மாடகம்

மாடகம் எனும் சொல் சங்க இலக்கியங்களில் காணப்படவில்லை. காப்பியங்களில் மாடகம் எனும் சொல் யாழின் உறுப்பு குறித்துக் கூறப்பட்டுள்ளது.

''மருப்பின் வாளார் மாடக வயிரத் ......''

—சீவக, 722:2

(ஈர்வாளின் முனைபோன்ற வளைவுகளுடை மருப்பின் மேற்பகுதி (மாடம் ஆகிய மாடகம்) (படம் 10 அ)
என்றும்

''நுண்கோல் மாடக நொண்டு கொண்டு''

மாடகத்தின் வளைவுகளுக்கிடையே அதனை அகழ்ந்து கொண்டிருப்பது போல் தோன்றும் நுண்கோல்)
என்றும் கூறப்பட்டிருப்பதால் மருப்பும் மாடகமும் ஒன்றையொன்று சார்ந்த உறுப்பின் பகுதிகள் என்றும், நுண்கோலாகிய மெட்டு மாடகத்தினைக் குறுக்காக இணைத்து வைக்கப்பட்டிருந்தது என்றும் அறியலாம்.

''மாடகம் என்பது விளக்குங்காலை
கருவிளங்காழ்ப்பினை நால்விரல் கொண்டு
திருவியல் பாலிகை வடிவாக்கடைந்து
சதுரமூன்றாய்த் துணையிடற்குரித்தே''

—சிலப், வேனிற் : உரைமேற்கோளி

எனும் வரிகள் மாடகம் பாலிகை கடையப்பட்டிருந்தது என விளக்குகின்றது.

''களங்கனியன்ன கதழ்ந்து கிளர் உருவின்
வணர்ந்தேந்து மருப்பின் .... ''

— மலைபடுகடாம் 36-37

(களங்கனியின் பிளந்ததோடு போல் விளங்கும் (படம் 10 ஆ) மருப்பு.)

ஈர்வாளின் முனைபோன்ற மருப்பின் மாடகம் என்றதாலும் பாலிகை வடிவில் மாடகம் கடையப்பட்டிருந்தது என்றதாலும், களங்கனியின் பிளந்ததோடு போல் விளங்கும் மருப்பு என்றதாலும் மருப்பும் மாடகமும் உருவ ஒற்றுமையுடைத்தாகின்றன.

''சதுர மூன்றாய்த் துளையிடற்குரித்தே'' எனும் உரைமேற்கோள் பாவரியின் முழு விளக்கம் ''யாழும் யாழ்முரிப்பண்ணும்'' எனும் கட்டுரையில் காண்க.

மருப்பும் மாடகமும் ஒன்றாகச் செய்யப்பட்டதால் சங்க இலக்கியங்கள் மருப்புப் பற்றி மட்டும் கூறி, மாடகம் பற்றித் தனியாகக் கூறவில்லை என்றும், பிற்கால இலக்கியங்கள் குறிப்பாக, காப்பியங்கள், மருப்பு, மாடகம் இவற்றைத் தனித் தனியாகவோ ஒரே உறுப்பாகவோ செய்து யாழில் பொருத்த முடியும் என்று விளங்குமாறு கூறியுள்ளன என்றும் கருதலாம் (படம் 11 அ,ஆ)

ஆணி

ஆணி பற்றிக் கூறும்போது

''அளைவாழ் அலவன் கண்கண்டன்ன
துளைவாய் தூர்ந்த துரப்பமை ஆணி''

—பொருநராற்றுப்படை, 9-10

வளையில் வாழும் நண்டின் கண்கள்போல் (காம்பின் அடிப்பாகம் தலைப்பகுதியின் மேலோட்டினால் மறைக்கப்பட்டு கண்பகுதியும் அதனைச் சார்ந்த காம்புப் பகுதியும் பக்கங்களில் நீண்டு) காணப் படும். மலைக் குடைவு வழிபோன்ற (tunnel) துரப்பினையும் அதன் வாய்ப்பகுதிகளாகிய துளையையும் அடைத்து நிற்கும் யாழின் ஆணி (படம் 12 அ, ஆ) எனப்பட்டது.

நண்டின் கண் போன்றது என்றதால் குமிழ்போன்ற (கண்) பகுதியும் பக்கங்களில் நீண்டுள்ள காம்பு (stalk) போன்ற பகுதியும் உடைய ஆணி என்க (படம் 12 அ).

''இலங்கு துளை செறிய ஆணி முடுக்கி''-மலைபடு., 27

(இலங்கு / இலங்கித்தல்- குறுக்காக அமைக்கப்பட்ட, transverse or across)

குறுக்காக (எதிர்ப்புறங்களில் அமையுமாறு) இடப்பட்ட துளைகள் இரண்டையும் சேர்த்து அவை மறையுமாறு சொருகப் பட்ட ஆணி.

'திங்கட் கோணிரைத்தனைய ஆணி''

—சீவக, 559:3

முழுதாக (நிரம்பி) வளர்ந்த திங்கட்கோள் போன்ற வட்ட வடிவாய்த் தோன்றும் (தலை / குமிழ் உடைய) ஆணி

''பரியரைக் கமுகின் பாளை அம் பசும் பூக்கரு
இருந்தன்ன கண்கூடு செறிதுளை''

— பெரும்பாணாற்றுப்படை 7-8

(பூக்கரு - பூங்குருத்து, பூமொட்டு, கூடு—பொருந்தி; செறி- நிரம்பி, சேர்ந்த)

கமுகின் (பாக்கு) பாளையினுள் காணப்படும் இளம் பூக்கருவினை (inflorescence) ஒத்த, துளைகளில் பொருத்தி பகுதி மறைந்து (திணிக்கப்பட்டுள்ள / சொருகப்பட்டுள்ள) காம்பினை உடைய உருண்டையான தலைப்பகுதி கொண்ட ஆணி என்க (படம் 12 இ)

நண்டின் கண் போன்றது என்றும் கமுகின் இளம்பூக்குருத்து போன்றது என்றும் கூறப்பட்டிருப்பதாலும் எதிர்ப்புறமாயுள்ள இருதுளைகள் மறையும் படி இணைத்துக் குறுக்காகச் சேர்க்கப் பட்டுள்ளது என்றதாலும் ஆணி என்பது இன்றைய வீணையின் பிரடைக்கு ஒப்பாயமைவது காண்க.

நரம்பு

நரம்பு என்பது யாழின் இரு வேறு உறுப்புக்களுக்கு பொதுப் பெயராய் அமைந்தது என எண்ண வேண்டியுள்ளது. இப் பெயர் பண்மொழி நரம்பு என்ற, ஆணியையும் யாழ்ப்பத்தரின் அடிப் பகுதியிலமையும் கவைக்கடையையும் இணைத்துக் கட்டப்படும், நீண்ட நரம்பையும், விரலுளர் நரம்பு என்ற, இணையான மருப் பின் மாடகத்தின் மீது குறுக்காக வைத்துத் திவவினாப் கட்டப் பட்ட, தந்திரிகரமாகிய நுண்கோல்களையும் குறிக்கும். இலக்கியங் களில் சிலவிடத்து மட்டும் நரம்பு எனும் சொல் பண்மொழி நரம்

பாகிய நீண்ட தந்திரி (தந்தி) குறித்தும் பெரும்பாலான விடத்து நுண்கோல்களாகிய விரலுளர் நரம்பு குறித்தும் கூறப்பட்டுள்ளது.

பன்மொழி

''பன்மொழி நரப்பிற் றிவவு யாழ் மிழற்றி''
—சிலப்.. இந்திரவிழா : 252

திவவினால் கட்டப்பட்டுள்ள நுண்கோல்களினிடத்தினின்று பன்மொழி நரம்பாகிய நீள் நரம்பினால் இசையொலியினை (யாழ்) எழுப்பி

(மிழற்றுதல்-ஒலியெழுப்புதல்; திவ்வு யாழ் மிழற்றியது என்றதால் இங்கு திவவு அதனால் கட்டப்பட்டுள்ள நுண்கோலினைச் சுட்டியது)

என்று கூறப்பட்டிருப்பதால் பன்மொழி நரப்பு என்பது நீண்ட தந்தி (தந்திரி) குறித்தது என்க.

சிலப்பதிகார காலத்தில் யாழில் ஒன்றுக்கு மேற்பட்ட பன் மொழி நரம்புகள் கட்டப்பட்டிருந்தன என்பதும், இந்நரம்புகளில மையும் இசையொலிகளை மாற்றிப்புணர்த்து (வர்த்தனை செய்து) நான்கு வர்த்தனைகளாக (வர்த்தனை செய்த நான்கு ஏழிசை கள்) இயக்கப்படும் என்பது

''புல்லிய அறிந்து புணர்ப்போன் பண்பின்
வர்த்தனை நான்கும் மயலறப் பெய்தாங்கு
ஏற்றிய குரலி என்றிறு நரம்பின்
ஒப்பக் கேட்கும் உணர் வினனாகி''
சிலப்பதிகாரம், அரங்கேற். : 57-60

எனும் வரிகளால் அறியலாம்.

இவ்வாறு குரலாகவும் இளியாகவும் கட்டப்பட்ட நரம்பு களினின்று வர்த்தனை செய்து நான்கு ஏழிசைகள் எழுதப்பட வேண்டுமாயின் ஒவ்வொரு நரம்பினின்றும் இரு தாயிகளில் ஏழிசை ஒலிகள் எழுப்புமாறு நுண்கோல்கள் / விரலுளர் நரம்புகள் அமைக்கப்பட்டிருக்க வேண்டும் என்றறிக.

இதன் விளக்கம் ''சிலப்பதிகாரத்து இசையிலக்கணம்'' அரங்கேற்று காதை (தமிழ்ப்பொழில், துணர் 67, மலர் 7, பக். 850-861)எனும் கட்டுரையில் காண்க.

விரலுளர் நரம்பு

''வேய்வை போகிய விரலுளர் நரம்பின்
கேள்வி போகிய நீள் வீசித் தொடையல்''

எனப் பொருநராற்றுப்படை (வரி 17-18) கூறுகின்றது.

(விரலுர்-விரலால் அசைக்கப்படும் / அலைக்கப்படும்; கேள்வி-இசைச்சுருதி; போகிய - நிறைவுற்ற, முடிவாகிய முற்றுப்பெற்ற; போதல் - மேம்படுதல் to exceed)

ஒவ்வொரு விரலுளர் நரம்பும் (மெட்டும் அதன் முந்தைய நரம் பிற்குரிய ஒலியளவின் (முந்தைய மெட்டினிடத்தில் எழும் ஒலியின்) எல்லையைக் குறிக்கும்.



(இரு சுரங்களுக்கிடையே உள்ள எண்கள் அலகிடைவெளிகள் குறிக்கும்)

உதாரணமாக, படத்தில் காட்டியபடி ரிகமபதநிச எனும் குறியீட் டெழுத்துக்களுக்குரிய ஒலியெழுப்பும் விரலுளர் நரம்புகள் முறையே சரிகமபதநி ஆகிய சுர ஒலிகளுக்குரிய ஒலியளவின் முடிவு நிலை யைக் குறிக்கும். ச-ரி, ரி-க, க-ம, ம-ப, ப-த, த.நி, நி-ச எனும் நரம்புகளுக்கிடையே விரலை அழுத்தி நீள் நரம்பினைத் தெறிக்க ரிகமபதநிச எனும் குறியீட்டெழுத்துக்களுக்குரிய இசை யொலி கேட்கும். அவ்விடங்களில் விரலை அழுத்தி அசைக்கும் போது ரிகமபதநிச ஆகிய சுரங்களுக்குரிய ஒலியளவைவிட அதிக மான ஒலி கேட்கும். தெறிக்கப்படும் நரம்பும், விரலாலசைக்கப் படும் நரம்பும் ஒன்றேயாயினும் ரிகமபதநிச எனும்சுரங்களுக்குரிய ஒலியையும், அவ்விடங்களில் நரம்பினை அழுத்தி அசைக்கும் போது கேள்வி போகிய (மாத்திரை கடந்த) ஒலியையும் ஏற்படுத் துவதற்குக் காரணமான நீள் நரம்பின் அடியில் குறுக்காக, நீள் வீசித் தொடையலாக, அமைக்கப்பட்ட நரம்புகள் விரலுளர் நரம்பு எனப்பட்டன.

நீள் விசித் தொடையல் - நீளமானதோர் உறுப்பு மீது தொடையலாகக் (வரிசையாக, in a series) கட்டப்பட்டிருந்தது என்றதாலும், அவ்விடத்துக் கேள்விபோகிய ஒலி ஏற்படுத்த

முடியும் என்றதாலும் விரலுளர் நரப்பு என்பது நீள் நரப்பாகிய பண்மொழி நரம்பினைக் குறித்ததல்ல, தந்திரிகரம் எனும் மெட்டுக் கிணையான உறுப்பைக் குறித்தது என்றறிக.

அவ்வாறு, மெட்டுக்கிணையான தந்திரகரம் அல்லது விரலுளர் நரப்புகள் அங்கு வைத்துக் கட்டப்படாவிடில் அவ்விடத்து அல்லது பண்மொழி நரப்பாகிய நீள் நரம்பில் எவ்விடத்தும கேள்விபோகிய ஒலி ஏற்படாது / ஏற்படுத்த முடியாது என்றும் அறிக

இவ்விரலுளர் நரம்பு, புரி நரப்பு, சுகிர் நரம்பு, வடி நரம்பு/ வடிப்புறு நரம்பு, தீந்தொடை நரம்பு / நரம்பின் தொடையல் என்றவாறும் கூறப்பட்டுள்ளது.

(புரி-மாலை; சுகிர் - ஒளி சிந்துகின்ற; உட்டுனையுடைய; வடித்தல் - திருத்தமாக்குதல்)

இவ்விரலுளர் நரம்புகள், ''பொன்வார்ந்தன்ன'' - பொன்னை உருளைகளாகச் செய்து வரிசையாக அமைத்தது போல (சிறுபான் 34; புற. 308:1) இருந்தன என்றதாலும், ''ஆடகச் செம்பொன் ஆணி ஆண்தெய் வார்ந்தனைய'' - செம்பொன்னை ஆணிகள் (pegs உருளைகள்) போலாக்கி அவற்றை அங்கு வரிசையாக அமைத்துத் தொடுத்தது போல் (சீவக 1967 :1) என்று கூறி யிருப்பதாலும், பண்மொழி நரம்பின் கீழ் வரிசையாக அமைக்கப் பட்ட பொன்போல் ஒளிரும் ஆணிகள் போன்ற நரம்புகள் அப்பன் மொழி நரம்பால் கட்டப்பட்ட பொன்மாலை போல் தோன்றியது எனக் கூறியது காண்க.

(வார்த்தல்-ஒழுங்காக அமைத்தல்; வரிசையாக அமைத்தல் வார்-ஒழுங்கு, வரிசை, order, row, straightness)
எனவே இப்புரியடங்கு நரம்பு, சுகிர்புரி நரம்பு, தொடை நரம்பு ஆகியவை சிறு உருளை போன்ற நரம்பாகிய மெட்டினைக் குறித்தது காண்க.

(—தொடரும்)

அப்பர் அடிச்சுவட்டில்......
பொருளாதாரச் சமநிலை

—பேரறிஞர் தா. ஈசுவரபிள்ளை

சமயம் என்பது சமுதாயத்தில் வாழ்கின்ற மக்களால் தோற்று விக்கப்பெற்று வளர்க்கப்பெறும் ஒரு சமுதாய நிறுவனம், எனவே சமயம் மக்கள் நலனுக்காக, அம்மக்கள் வாழும் சமுதாயத்தின் மேன்மைக்காகப் பல்வேறு சிந்தனைகளை வெளிப்படுத்தும் என்பது மறுக்க முடியாத உண்மை ஆகும். சமயம் இறை உணர்வை ஊட்டுதல், இறைப்பற்றை வளர்த்தல், இறை அனுபவங்களை வெளிப்படுத்தல என்ற நிலைகளில் மட்டும் நின்று விடுமானால் அச்சமயம் சமுதாயத்தில் நீண்டகாலம் நிலைத்து நிற்க முடியாது. எந்த ஓர் இயக்கமும் மக்களோடு மக்களாகப் பின்னிப் பிணைந்து செயல்பட்டால்தான் அதனால் தொடர்ந்து சமுதாயத்தில் இயங்க முடியும். இவ்வகையில். சமயத்தின் அடிப்படையில் தோன்றிய இலக்கியங்களிலும் சமுதாய நலச் சிந்தனைகளைக் காண முடிகிறது. சமுதாய நலம் அல்லது சமுதாய மேம்பாடு என்பது ஒரு துறையினால் மட்டும் ஏற்படுவதன்று. சமுதாயத்தில் காணப்படும் பல்வேறு நிறுவனங்களின் முயற்சியால் உருவானதாகும். பல்வேறு நிறுவனங்கள் தத்தம் குறிக்கோள்களுக்கேற்ப, தத்தம் கொள்கைகளுக்கேற்பப் பல்வேறு சிந்தனைகளை வெளிப்படுத்துவதன்மூலம் சமுதாய மேன்மைக்கு உறுதுணை செய்கின்றன. இக்கருத்துக்களின் அடிப்படையில் அப்பர் தேவாரத்தில் காணப்படும் பொருளாதாரச் சமநிலை பற்றிய சிந்தனைகளை இவண் சுட்டலாம்.

அப்பர் வாழ்ந்த காலச் சமுதாயத்தில் சமண, பௌத்த சமயங்கள் செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தன சமண பௌத்த சமயங்களின் செல்வாக்கைக் குன்றச் செய்து, சைவ, வைணவ சமயங்களைப் பெருவளர்ச்சியடையச் செல்வதற்காகப் பக்தி இயக்கம் சார்ந்த அருளாளர்களில் அப்பர்பெருமானும் குறிப்பிடத்தக்கவர் ஆவர். பக்தி இயக்கம் வலுவடைய வேண்டும் எனஎண்ணிய

அப்பர்பெருமான், மக்களின் பேராதரவைத் திரட்ட எண்ணினார். எனவே, மக்களின் வாழ்க்கைநிலை எவ்வாறு உள்ளது என்பதை உன்னிக் கவனித்தார். மக்களிடையே சாதியின் பெயராலும் பொருளாதாரத்தின் அடிப்படையிலும் ஏற்றத்தாழ்வுகள் நிலவு வதைக்கண்டார். உயர்சாதியினரும், உயர் பொருளாதார வாய்ப்பைப் பெற்றோரும் இன்பமிக்க, ஆதிக்கம்மிக்க, மேன்மை யான வாழ்க்கை வாழ்ந்து வருவதையும், தாழ்ந்த சாதியினரும், பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினரும் துன்பம மிக்க, சமய, பொருளாதார, சமுதாய இயலாமை நிறைந்த வாழ்க்கை வாழ்ந்து வருவதையும் கண்டார். எனவே, பக்தி இயக்கம் வளர்ச்சிய டையச் சமுதாய, பொருளாதார நிலைகளில் பின்தங்கிய மக்கள் மேன்மை பெற்றாக வேண்டும் என உறுதியாக நம்பினார். எனவே, இறையுணர்வூட்டும் தம் தேவாரப்பாடல்களில் சமுதாய, பொருளாதாரச் சிந்தனைகளை இடம்பெறச் செய்தமையுடன் அவ் வாறு வாழ்ந்தும் காட்டினார். இதனால், பாமர மக்களும் நம்பிக் கையுடன் பக்தி இயக்கத்தில் ஈடுபடப் பக்தி இயக்கம் பெரு வளர்ச்சியுற்றது எனலாம். இனி, அப்பர்பெருமானின் தேவாரப் பாடல்களில் இடம்பெறும் பொருளாதாரச் சமநிலைக்கான சிந் தனைகள் சிலவற்றைக் காண்போம்.

பொருளின் இன்றியமையாமை

''அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருள்
இல்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு''

என்பது வள்ளுவர் வாக்கு. (குறள், 247) இவ்வுலக வாழ்க்கையில் நிறைவு பெற்றால்தான் அவ்வுலக வாழ்க்கை பற்றிய சிந்தனை மக்கள் மனத்தில் எழ முடியும். இவ்வுலக வாழ்க்கைக்கு இன்றிய மையாது வேண்டப்படுவது பொருள். பொருளின் பெருமையை,

''மாடுதான் அது இல்லெனில் மானுடர்
பாடுதான் செல்வார் இல்லை'' (5:70:3:1-2)

என அப்பர்பெருமான் சுட்டுகின்றார்.

''உய்ந்தேன் மனை வாழ்க்கையும் பொருளும்''
(4:1:7:1)

என்ற அடியில் அப்பர்பெருமான் மனை வாழ்க்கைக்கு வேண்டிய தாய்ப் பொருளைக் குறிப்பிடுகின்றார். பொருள் இல்லாமையால்

ஏற்படுவது வறுமை. மக்களின் வாழ்க்கையில் கொடுமையானது வறுமை நிலை. அது மக்களைத் தாமாகச் சிந்திக்கும் ஆற்றலை இழக்க வைக்கின்றது. பல்வேறு இழிநிலைகளுக்கு ஆளாக்குகிறது. எனவேதான் வள்ளுவர் 'இன்மையென ஒரு பாவி'' (1042) என்கின்றார். இல்லாமையால் வாழ்க்கையில் பல்வேறு துன்பங்கள் ஏற்படும் என்பதையும் வள்ளுவர்,

''நல்குரவு என்னும் இடும்பையுள் பல்குரைத்
துன்பங்கள் சென்று படும்'' (1045)

என்கின்றார். இல்லாமையால் ஏற்படும் கொடிய செயல் பசி. பசியானது மக்களை மாக்களாக மாற்றிவிடும். மானத்தை இழக்கச் செய்யும். இதனால் தான் சாத்தனார்,

''மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே''
(11:92-96)

என்று உண்டிகொடுக்கும் அறத்தை உயிர் கொடுக்கும் அறமாகக் கூறுகின்றார். இத்தகைய இல்லாமை, பசி ஆகியவற்றில் சிக்கித் தவிக்கும் மக்களிடம் சென்று இறைவன் பெருமைகளையும், சமய வளர்ச்சியையும் பற்றிக் கூறினால், அவர்கள் மனம் அவற்றை ஏற்றுக்கொள்ளாது என்ற உண்மையை அப்பர்பெருமான் உணர்ந்தார். எனவே, பக்தி இயக்கம் வளர மக்களிடையே பொருளாதாரச் சமநிலை உருவாக வேண்டும் என எண்ணி, ஆன்மீக அடிப்படையில் பல வழிமுறைகளைக் கூறுகின்றார்.

கொடையை வலியுறுத்தல்

பொருளாதாரச் சமநிலை உருவாகப் பல வழிகள் பலரால் வலியுறுத்தப்படுகின்றன. அவற்றுள் ஒன்று கொடை கொடுத்தல். கொடைப் பண்பு பண்டைக்காலம் முதலே தமிழ் இலக்கியங்களில் வலியுறுத்தப்பட்டு வருவதைக் காணலாம். கொடை கொடுப்பதன் மூலம் வறியவர்களின் பொருளாதார இன்னல்கள் நீங்க வழி உள்ளது. பொருளாதார இன்னல்கள் நீங்கும்போது வறியவர்களுக்குச் சிந்திக்கும் ஆற்றலும் ஊக்கமும் ஏற்படும். அப்பர் பெருமான் இவற்றை உணர்ந்து,

''இரப்பவர்க்கு ஈய வைத்தார் ஈபவர்க்கு
அருளும் வைத்தார்'' (4:38:10:1)

எனக் கொடை கொடுப்பதால் ஏற்படும் பயனைக் கூறிச் செல்வர்களைக் கொடை கொடுக்கத் தூண்டுகின்றார். பயன் கூறினால் மட்டும் செல்வர்கள் கொடை கொடுக்க முன் வரமாட்டார் என எண்ணிக் கொடாமையின் தீமையினை,

> ''கரப்பவர் தங்கட்கு எல்லாம் கடுநரகங்கள் வைத்தார்''
> (4:38;10:2)

எனக் காட்டியும் கொடை கொடுக்கத் தூண்டுகின்றார். செல்வர்கள் கொடை கொடுக்கும் போது அவர்களிடம் தேங்கிக்கிடக்கும் செல்வம் வறியவர்களிடம் செல்வதால் செல்வச் சுழற்சி ஏற்பட்டுப் பொருளாதாரச் சமநிலை ஏற்பட வாய்ப்புள்ளது எனலாம்.

செல்வம் மீதுள்ள பற்றறுத்தல்

ஒரு பொருளின் மீது நாம் பற்று வைக்கும்போது அதை இழக்காமல் பாதுகாப்பதில் கண்ணும் கருத்துமாக இருப்போம். எனவே, செல்வத்தின் மீதுள்ள பற்றின் காரணமாகத்தான் செல்வர்கள் தம் செல்வத்தை வறியவர்களுக்குக் கொடுக்கத் தயங்குகின்றனர் என உணர்ந்த அப்பர்பெருமான் செல்வத்தின் மீதுள்ள பற்று நீங்குவதற்காகச் செல்வத்தின் நிலையற்ற தன்மைகளை எடுத்துக் கூறுகின்றார்.

> ''வைத்த மாடும் மனைவியும் மக்கள் நீர்
> செத்தபோது செறியார் பிரிவதே''
> (5:, 2:1;1-2)

> ''வைத்த மாடும் மடந்தைநல் லார்களும்
> ஒத்தொவ் வாதவுற் றார்க்கு மென்செய்வார்''
> (5:77:7:1:-2)

என்பதால் செல்வம் - பிறர்க்குக் கொடுக்காது சேர்த்து வைத்த செல்வம் - நாம் இறக்கும்போது உடன் வராது என்று கூறி அச் செல்வத்தின் மேலுள்ள பற்றைவிட வேண்டும் என வலியுறுத்துகின்றார்.

செல்வத்தின் நிலையற்ற தன்மையை உணரும் போது செல்வத்தின் மீதுள்ள பற்றை விடுவதில் ஓர் உறுதி ஏற்படும் என்பதை.

''சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து
தரணியொடு வானாளத் தருவரேனும்
மங்குவார் அவர் செல்வம் மதிப்போம் அல்லோம்.
(6:95:10;1-2)

என்ற அடிகளால் உணர்த்துகின்றார். இவ்வாறு பற்றுவிடுவதில் உறுதி ஏற்பட்டால் இறையருள் கிட்டும் என்பதை,

''பொருளினொடு நல் சுற்றமும் பற்று இலர்க்கு
அருளும் நன்மை தந்து ஆய அரும்பொருள்''
(5:47:5:1-2)

எனக் காட்டுகின்றார் மேலும்,

''மருவி நின் பாதம் அல்லால் மற்று ஓர் மாடு இலனே''
(4:63:3:4)

எனப் பொய்ச்செல்வப் பற்றை விட்டு உண்மைச் செல்வமாகிய இறைவன் பாதங்களின் மேல் பற்று வைக்கவேண்டும் என்கின்றார். இவ்வாறு கொடை கொடுக்கத் தூண்டும் இன்றியமையாப் பண்புகளுள் ஒன்றாகிய பற்றறுத்தலை வலியுறுத்தக் காணலாம்.

அன்பு கொள்ளல்

செல்வர்கள் தம்மையொத்த மனிதர்களே வறியவர்கள் என்றும், அவர்கள் படும் துன்பம் தாம் படும் துன்பம் ஆகும் என்றும் மனித நேயத்துடன் எண்ணிப் பார்ப்பார்கள் என்றால் தம் பொருளைக் கொடை கொடுத்து அவர்களையும் உயரச் செய்ய முன் வந்துவிடுவர். இத்தகைய மனிதநேயம் உருவாக அடிப்படையானது அன்பு ஆகும். வள்ளுவரும்,

''அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு'' (72)

என்றார். அன்புடைமை காரணமாக இரக்கமுடைமை தோன்றும். இரக்கமுடைமை தோன்றினால் கொடைப்பண்பு வளர்ந்துவிடும். இதையே ''தயாமுலதன்மம்-இரக்கமே அடிநிலை அறம்''-என்றார் அப்பர்பெருமான்.

''சலம் கெடுத்துத் தயாமூலதன்மம் என்றும்
தத்துவத்தின் வழிநின்று தாழ்ந்தோர்க்கு எல்லாம்
நலம் கொடுக்கும் நம்பியை'' (6:20:6:3-4)

என்றும்,

''தயாமூல தன்மவழி எனக்கு நல்கி'' (6:40:6:3)
என்றும் வரும் அடிகள் தயாமூலதன்மத்தை வலியுறுத்துகின்றன.

இரவாமை

செல்வர்களைப் பார்த்துக் கொடை கொடுக்குமாறு அறிவுறுத்திய அப்பர்பெருமான் வறியவர்களைப் பார்த்து இரவாமையை அறிவுறுத்தவும் செய்கின்றார்.

''இன்மை இடும்பை இரந்துதீர் வாமென்னும்
வன்மையின் வன்பாட்டது இல்'' (1063)

என்றார் வள்ளுவர். இரப்பது போன்ற வலிமைப்பாடுடையது வேறு இல்லை என்றார். பிறரிடம் சென்று இரப்பதன் மூலம் மதிப்பு குறைவதுடன், உழைப்பின்மை ஏற்பட்டுவிடும். பொருளாதாரச் சமநிலைக்குக் கொடை கொடுத்தல் ஒரு வழியே தவிர, இரப்பது என்பதும் வழி ஆகாது. எனவே தான் அப்பர்,

''இடுக்கண்பட்டு இருக்கிலும் இரந்து யாரையும்
'விடுக்கிற்பிரான்' என்று வினவுவோம் அல்லோம்''
(4:11:4:1-2)

என்றார்.

சோம்பலின்மை - உழைத்தல்

வறியவர்கள் பொருளாதாரச் சமநிலைக்குச் செல்வர்கள் கொடை கொடுத்தல் என்பது ஒரு நிரந்தரத் தீர்வு அன்று. வறியவர்கள் உழைத்து, சோம்பலை விட்டு, முயற்சியுடன் வாழ்ந்தால் அவர்கள் தம் பொருளாதார நிலையில் முன்னேற முடியும் என்பது உலகியல் நெறியாகும். வள்ளுவரும்,

''ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையான் உழை'' (594)

என்றார். இதற்கு மாறாக,

''மடிமை குடிமைக்கண் தங்கின்தன் ஒன்னார்க்கு
அடிமை புகுத்தி விடும்'' (608)

என்று சோம்பல் கொள்ளுவதின் தீமையையும் சுட்டுகிறார். எனவே தான் அப்பர் பெருமானும், மனம் விரும்பியவற்றைச் செய்து வீணாகக் காலம் கழிக்காதீர்; பயனற்ற செயல்களைச் செய்து

வீணாக இறவாதீர்; காலங்களை வீணாகப் போக்காதீர் என அறிவுறுத்தும் போக்கில்,

''காமியம் செய்து காலம் கழியாதே'' (5:22:8:1)

''பூத்தாடிக் கழியாதே நீர்'' (5:22:2:1-2)

''பொக்கம் பேசிப் பொழுது கழியாதே'' (5:43:2:1)

என அறிவுரைகள் கூறுவதுடன் அமையாது.

''பொழுது போக்கிப் புறக்கணிப்பாரையும்
எழுதும் கீழ்க்கணக்கு இன்னம்பர் ஈசன்''
(5:21:8:3-4)

என அறிவுறுத்தவும் செய்கின்றார். எனவே, வறியவர்கள் தம் பொருளாதாரத் தாழ்நிலையை எண்ணி வருந்தி, சோம்பி வாழாமல் உழைத்து, முயன்று, ஊக்கமுடன் வாழ்ந்தால் பொருளாதார நிலையில் முன்னேற முடியும் என வழிகாட்டுகின்றார்.

நம்பிக்கையூட்டல்

வறியவர்கள் தம் நிலையை எண்ணி, வருந்தி, சோம்பி வாழாது உழைத்தால் முன்னேறலாம் என்ற நம்பிக்கை கொள்ள வேண்டும். இந்த நம்பிக்கைய இறைவன் பெயரால் அப்பர் பெருமான் ஊட்டுகின்றார்.

''ஏத்துவார் இடர்கள் தீர்ப்பான்'' (4:24:4:2)
''வணங்குவார் இடர்கள் தீர்க்கும் மருந்து'' (4:49:9:2)
"ஏத்துவார் இடர்கள் தீர இன்பங்கள் கொடுப்பர் போலும்"

என இறைவன் பெருமைகளைக் கூறியதுடன்,

''வாய்த்தது நம் தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின்''
(4:81: :1)

என நம்பிக்கை ஒளியை ஏற்றிவைக்கவும் செய்கின்றார்.

இவ்வாறு, அப்பர்பெருமான் செல்வர்களைக் கொடை கொடுக்க வேண்டியும், வறியவர்களை உழைத்து முயலவேண்டியும சமுதாயத்தில் பொருளாதாரச் சமநிலை ஏற்படப் பாடுபடுகின்ற மையை உணரமுடிகிறது அப்பர் அடிகளின் அடிச்சுவட்டில் நாமும் சென்று வாழ்தல் பொருளாதாரச் சமநிலை உருவாவதன் வழிகளில் ஒன்று ஆகும் எனலாம்.

செந்தமிழ் இலக்கணமும் தொன்னூல் விளக்கமும்

— பேரறிஞர் பெ சுயம்பு

முன்னுரை

கிறித்தவத்தைத் தமிழரிடையே பரப்புதற்கு வந்த மேனாட்டறிஞர்கள், சமய வளர்ச்சியோடு மொழி வளர்ச்சிக்கும் பெரிதும் தொண்டாற்றியுள்ளனர். அன்னாரின் பணியில் சமயமும் மொழியும் ஒரே காலத்தில் ஒருசேர வளர்ச்சியை நோக்கி முன்னேறின.

சமயப் பணியின் பொருட்டுத் தமிழகம் போந்து, தமிழ்மொழி வளர்ச்சியில் புதிய பாதைகளைத் தோற்றுவித்தோருள் முதன்மையானவர் வீரமாமுனிவர். இத்தாலியில் தோன்றிய கான்ஸ்டான்சியஸ் ஜோசப் பெஸ்கியே தைரிய நாதர் என்றும் வீரமாமுனிவர் என்றும் பெயராலும் வாழ்வியல் முறைகளாலும் மொழியாலும தம்மை இந்திய-குறிப்பாகத் தமிழிய வயப்படுத்திக் கொண்டார்.

வீரமாமுனிவர் பல்வேறு துறைகளில் தமிழில் முதல்வராகவும் முன்னோடியாகவும் திகழ்கின்றார். இவர் தேம்பாவணியின் வாயிலாக முதலாம் கிறித்தவப் பேரிலக்கியம் தந்தவரானார். பேச்சு மொழி (கொடுந்தமிழ்), எழுத்துமொழி (செந்தமிழ்) எனும் இருவினை மொழிகளுக்கும் உரைநடையில் இலத்தீனில் இவர் இலக்கணம் வரைந்தார். இவரது பரமார்த்த குரு ஏளனக் (setire) கதையிலக்கியத்தின் முதற்படிக்கல்லாகத் திகழ்கிறது[1]. பாமரர்க்கும் புரியும் வகையில் உரைநடையைத் தமிழில் எழுதியதால், இவர் உரைநடை இலக்கியத்தின் முன்னோடி எனப் போற்றப்படுகின்றார். இவர் இயற்றிய சதுரகராதியே செய்யுள் வடிவில் நகர்ந்த தமிழ் அகராதிக் கலைக்கும் புதிய நெறியைக் காட்டியது. இன்றைய தமிழ் அகராதிகளுக்கு இந்நூல் முன்மாதிரியாகும்.

முனிவர் படைத்த இலக்கண நூல்களுள் செந்தமிழ் இலக்கணமும் தொன்னூல் விளக்கமும் எழுத்துமொழி அமைப்பினை

விளக்குகின்றன. இவ்விரு நூல்களும் இக்கட்டுரையில் ஒப்பிடப் படுகின்றன.

1. படைப்பின் நோக்கம்

செந்தமிழ் இலக்கணம்

செந்தமிழ் இலக்கணமும் தொன்னூல் விளக்கமும் படைக்கப்பட்டதன் நோக்கத்தை முனிவர் அவ்வந் நூற்பாயிரத்தில் உணர்த்துகின்றார். 'இயேசு சபையினருக்கு வாழ்த்து' எனும் தலைப்பிலமைந்த செந்தமிழ் இலக்கணத்தின் முன்னுரை கிறித்தவத்தைத் தமிழரிடையே பரப்புவதற்குத் துணிவு கொண்ட இயேசுசபையினர் செந்தமிழ் மொழியைக் கற்க வேண்டியதன் கட்டாயத்தை வெளிப்படுத்துகின்றது.

> உயர்நடை மொழியாகிய (high dialect) செந்தமிழில் மிகச் சில தமிழரே புலமை பெற்றுள்ளனர்..... செந்தமிழிலுள்ள பெரும்பான்மை நூல்கள் செய்யுள் வடிவிலேயே உள்ளன. இங்குச் செய்யுள் இயற்றவல்ல புலவர்களுக்கு மிகுந்த மதிப்பு உள்ளது.....இப்புலவர்கள் தாம் இயற்றிய செய்யுட்களைப் புரிந்து கொள்ள இயலாதவர்களை யாதும் அறியாதவர்களாகக் கருதி இழிசெய்கின்றனர்...... நாம் அவர்களின் சொந்த ஆயுதத்தையே அவர்களுக்கு எதிராகத் திருப்புதலின் வழி ... நம் இறைப்பணியில் நிறைவு கொள்ளமுடியும்[2] ...

இலத்தீன் அறிந்த இயேசு சபை ஊழியர் புலவர் நடையாகிய செந்தமிழைக் கற்கும் நோக்கில் செந்தமிழ் இலக்கணம் இலத்தீன் மொழியில் 1730-இல் இயற்றப்பட்டது. ஈராண்டுகளுக்கு முன்னர் (1728-இல்) எழுதி அனுப்பி வைக்கப்பட்ட கொடுந்தமிழ் இலக்கணத்தின் தொடர்ச்சியாகவும் கூடுதல் செய்தியாகவும் இந்நூல் காணப்படுகிறது[3] மக்களின் பேச்சு மொழியை அறிந்து, அவர்களோடு நேரடித் தொடர்பு கொள்ளக் கொடுந்தமிழ் இலக்கணம் இயற்றிய முனிவர், அவர்களின் நன்மதிப்பை இயேசு சபையினர் பெறுவதற்குச் செந்தமிழ் இலக்கணத்தை இயற்றினார் என்பது முன்னுரையினின்று தெரிய வருகின்றது.

தொன்னூல் விளக்கம்

தொன்னூல் விளக்கம் 1730இல் இயற்றப்பட்டது. இதன் பாயிரங்கள் நூலிலெழுந்த நோக்கத்தினை வெளிப்படுத்துகின்றன.

மேவிய வைம்பொருள் விளக்க லுணர்ந்து
விரிவிலாத் தொன்னூல் விளக்க மெனும்பெயர்த்
தரிய வாசிரிய ருந்தமிழ்ச் சொல்லிற்
பிறநூன் முடிந்தது பெயர்த்துடன் படுத்தியும்
புறநூன் முடிந்தது பொருத்தியுந் தானொரு
வழிநூன் முடித்தனன் ...... (பொதுப்பாயிரம்)

நன்னூ லாய்ந்தோர் நவின்ற வைம்பொரு
டொன்னூல் விளக்கமுன் சொற்றது மெழுத்தே.
(சிறப்புப்பாயிரம்)

இப்பாயிரச் செய்யுட்களின்றி, முனிவர் இயற்றிய உரையும் நூலின் நோக்கத்தினைப் புலப்படுத்துகின்றது.

> மூத்தோர் புதைத்த வரும் பயனாகிய பொருளைக் கண்டறிந் தெடுப்பதற்கு இலக்கண நூலே விளக்காம். விளக்குதால் விளக்கென்னப்பட்டது. ஒளி விடா மூடின தீபத்தாற் பய னில்லை யென்றது போல முன்னோர் தந்த விலக்கண நூலெலாஞ் செந்தமிழ்ச் சிறந்த மொழியோடு மூடிக்கிடப்ப விக் காலத் தவ்விளக்கொளியைக் காண்பாரில்லாததற்கொரு பயனுமில்லை .. மூத்தோர் புதைத்த நூனலம் விளங்கவும் கல்லாதவரும் பயன் கொண்டுணரவு நானே யதன் மேற் கவித்த போர்வை நீக்கி, யறிஞர் முன் கொளுத்தின தீப மெவர்க்கு மெரிப்பக் கையிலேந்தினாற் போல, வவர்முன் செந்தமிழ் மொழியான் மறைத்த விலக்கண நூலையிளந் தமிழுரையால் வெளிப் பொருளாக்க நினைத்தேனாயினு, முன்னோர் தந்த யாவையும் விரித்தாலிந் நூலும் பெருகிக் கண்டவரஞ்சித் துணியாரென்று கருதி, முனமிக வறிய வேண்டுவதொன்றைத் தெரிந்து தருவேன்...

முந்தை இலக்கண நூல்கள் புரிதற்கரிய கடுநடையிலும் மறைபொருளிலும் அமைந்திருத்தலோடு, சில நூல்கள் மிக விரிவா கவும் உள்ளன என்று முனிவர் கருதுகிறார். இத்தகு புலப்பாட்டு நெறியும் மலைதற்குரிய விரிவுமே தென்னூல் விளக்கம் இயற்றிட முனிவரைத் தூண்டின என்பது அவர்தம் உரைவழிப் புலனாகின்றது.

முந்தை இலக்கண நூல்களுள் தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் எனும் முப்பகுப்பில் விரிவாக இலக்கணத்தை விவரிக்கிறது. பிற்காலத்துப் பரவலாக ஏற்கப்பெற்றிரிக்கும்

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி எனும் ஐம்பகுப்புத் தொல்காப்பியத்தினின்று வேறுபட்டது. மேலும், புரிதற்கரிய நடையும் மறைபொருளும் உடையது என்று செந்தமிழ் இலக்கணத்தில் தொல்காப்பியத்தை முனிவர் குறிப்பிடுகின்றார். மிகவும் போற்றத் தகுந்த நூல் என்று முனிவரால் கொண்டாடப்படுகின்ற நன்னூலில் எழுத்து, சொல் ஆகிய ஈரிலக்கணங்கள் மட்டுமே காணப்படுகின்றன. பிரயோக விவேகமும் இலக்கணக் கொத்தும் சொல்லிலக்கணத்தில் சில பகுதியை மட்டும் வடமொழியைத் தழுவி விவரிக்கின்றன. வீரசோழியம் எழுத்து முதலிய ஐந்திலக்கணங்களையும் சுருக்கிக் கூறும் வடமொழித் தழுவல் நூலாகும். இலக்கண விளக்கம் ஐந்திலக்கணங்களையும் தமிழ்வழிக் கூறும் விரிவான நூலாகும்.[5] ஆனால் தொன்னூல் விளக்கத்தில் ஐந்திலக்கணங்களும் தமிழ் மரபை ஒட்டிச் சுருக்கமாக விவரிக்கப்பட்டுள்ளன.[6] எனவே தமிழறிஞர்களுக்குப் பயன்படும் வகையில் தமிழ்மரபை ஒட்டிச் சுருக்கமாக ஐந்திலக்கணங்களையும் கூறும் நோக்கில் முனிவர் இந்நூலை இயற்றினார் எனலாம்.

வீரமாமுனிவர்க்கு ஏறக்குறைய ஒரு நூற்றாண்டிற்கு முன்னர் வாழ்ந்த திருவாரூர் நாவலர் வயித்தியநாத தேசிகர் எனும் சைவப்புலவர் தமிழ் மரபை ஒட்டி, ஐந்திலக்கணங்களையும் இலக்கண விளக்கம் எனும் பெயரில் விவரித்துள்ளார். அந்நூலும் நூற்பா, உரை எனும் வடிவில் அமைந்துள்ளது. சைவ சமயத்தைச் சார்ந்தோர் எழுதிய நூலுக்கு இணையாகக்கிறித்தவச் சமயத்தைச் சார்ந்த வீரமாமுனிவரால் தொன்னூல் விளக்கம் எழுதப்பட்டது என்று கொள்வது வீரமாமுனிவரின் உள்ளக் குறிப்பைப் பெரிதும் வெளிப்படுத்துவதாக அமையும். சமய உணர்வு நன்னூல் முதலிய பிற நூல்களிலும் காணப்படுகிறது[7] இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம் எனும் பெயரமைப்பு இதனை உறுதிப்படுத்துகிறது.

2 நூலமைப்பு

செந்தமிழ் இலக்கணம்

செந்தமிழ் இலக்கணம் இலத்தீனில் எழுதப்பட்ட உரைநடை நூலாகும். இதனைப் பெஞ்சமின் கெய் பேபிங்டன் (Benjamin Gay Babington) ஆங்கிலத்தில் பெயர்த்து 1822-இல் வெளியிட்டார்.

எழுத்து, சொல், யாப்பு, அணி எனும் நான்கனையும் இருபகுதிகளில் செந்தமிழ் இலக்கணம் விவரிக்கிறது. எழுத்து. பெயர்ச்சொற்கள், வினைச் சொற்கள், எனும் மூன்று அதிகாரங் கள் முதற்பகுதியில்[1] இடம் பெற்றுள்ளன. செய்யுளுறுப்புகள். பாவகைகள், பாவினங்கள். அணிகள் மற்றும் பாட்டியல் மரபுகள் எனும் நான்கு அதிகாரங்கள் இரண்டாம் பகுதியில் இடம் பெற் றுள்ளன, முதற்பகுதி செய்யுள் நடையைக் கருத்திற் கொண்டு சொல்லமைப்பை விவரிக்கிறது இரண்டாம் பகுதி செய்யுளமைப்பு. அதன் வகைகள், சில இலக்கிய வகைப்பாடு மற்றும் மரபு நெறி கள் எனும் இலக்கிய அமைப்பு விதிகளை விவரிக்கிறது. முதற் பகுதியின் இறுதியில் வினைச்சொல் குறித்த சில செய்திகள் பிற்சேர்க்கையாக இணைக்கப்பட்டுள்ளன. அதிகாரச்செய்தி ஒவ் வொன்றும் தனித்தனியே பத்திகளாகப் பகுக்கப்பட்டு பத்திகளுக்கு எண்கள் குறிக்கப்பட்டுள்ளன. இவ்வெண்களைத் தகுந்த இடங் களில் ஒப்பீட்டுக் குறிகளாக (Cross References) நூலாசிரியர் பயன்படுத்தியுள்ளார். முழுமையாக நோக்குங்கால் செந்தமிழ் இலக்கண நூலமைப்பு இக்காலவேடுகளுக்கு முன்மாதிரியாகத் திகழ்கிறது.

தொன்னூல் விளக்கம்

தொன்னூல் விளக்கம் நூற்பாக்களும் அவற்றிற்கு விளக்க மாகிய உரையும் என அமைந்த நூலாகும். இந்நூல் எழுத்து. சொல், பொருள், யாப்பு, அணி எனும் ஐந்திலக்கணங்களையும முறையே எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம், யாப்பதிகாரம், அணியதிகாரங்களில் விவரிக்கிறது. எழுத்ததிகாரச் செய்திகள் எழுத்தியல் எனும் ஓரியலாக உருப்பெற்றுள்ளன[9] சொற்பொதுவியல், பெயரியல், வினைச்சொல்லியல், இடைச்சொல் லியல், உரிச்சொல்லியல் ஆகிய இயல்கள் சொல்லிலக்கணத்தை வகைப்படுத்தி விவரிக்கின்றன. பொருளதிகாரத்தில் உட்பகுப்பு இயல்கள் அமையவில்லை. செய்யுளுறுப்பு, செய்யுளியல், செய்யுள் மரபியல் எனும் மூன்று பகுதிகள் யாப்பதிகாரத்தில் உள்ளன. சொல்லணியியல். பொருளணியியல் எனும் இரு பகுதிகள் அணியதி காரத்தில் அடங்கியுள்ளன.

செய்திகளை வரிசைப்படுத்திக் கூறுதலிலும் விவரிக்கும் முறையிலும் கருத்துகளை நுணுகி நோக்குதலிலும் சில வேறு

பாடுகள் முந்தை நூல்களினின்றும் தொன்னூல் விளக்கத்தில் காணப்படுகின்றன. எனினும் நூலினமைப்பு முந்தைத்தமிழ் மரபி லக்கண நூல்களினின்றும் பெரிதும் பிறழவில்லை.

3. அணுகுமுறை
செந்தமிழ் இலக்கணம்

செந்தமிழ் இலக்கணமும் தொன்னூல் விளக்கமும் விளக்க விலக்கண நூல்களே, எனினும் இயற்றப்பட்டதன் நோக்கம் இரண்டற்கும் வெவ்வேறானதால் அணுகுமுறையிலும் வேறுபாடு காணப்படுகிறது

செந்தமிழ் இலக்கணம் அயல்மொழியாளர் ஆசிரியர் (instructor) துணையின்றித் தாமே கற்கும் வகையில் இயற்றப் பட்ட தற்பயில்வு நூல் (self instructional book) ஆகும். எனவே கற்போர் எளிதில் புரிந்து கொள்ளுமாறு செய்திகளைச் சுருக்க மாகவும் எளிமையாகவும் கற்பவரின் மொழியாகிய இலத்தீனில் தரும் நெறிகள் இந்நூலில் காணப்படுகின்றன அவற்றுள் சில :

(அ) இந்நூல் விளக்க முறையிலானதெனினும். ஒப்பாய்வு முறை யும் ஆங்காங்கே இடம்பெற்றுள்ளது. தமிழ்க் கூறுகள் சில இலத்தீன். பிற ஐரோப்பிய மொழிக்கூறுகளோடு ஒப்பிடப் பட்டுள்ளன. மாற்றுப்பெயர்கள், வேற்றுமை வினையெச்சம் ஆகியவற்றை விவரிக்குமிடங்களில் இந்நெறியைக் காண லாம்.

(ஆ) சொற்களை உருபன்களாகப் பகுத்துச் சுட்டி விவரிக்கும் பகுப்பாய்வின்வழி. ஆசிரியர் தமிழ்ச் சொற்களை இனம் கண்டு மாணவர் எளிதில் புரிந்து கோடற்கு வழிகாட்டு கின்றார். வினைச்சொற்களை விவரிக்குமிடத்து இப்பகுப் பாய்வு மிகுதியாக இடம்பெற்றுள்ளது

(இ) பொருட் புலப்பாட்டிற்கு முன்னுரிமை கொடுத்து, சொற்கள் பேரளவுப் பகுப்பு முறையில் இனங்காட்டப்படுகின்றன. இம்முறையின்வழி மாணவர் வாய்ப்பாட்டு முறையில் (pattern system) புதிய சொற்களைத் தாமே உய்த்துணர வியலும். முடுக்கிறது எனும் சொல் முடுக்கு+கிறது என் றும் திரிவன எனும் சொல் திரி+வன என்றும் பகுத்து

விளக்கப்படுகின்றன. இங்கு முடுக்கு, திரி என்பவற்றைப் பகுதி என்று குறிப்பிடுவதோடு, ஏவலொருமை என்றும் ஆசிரியர் சுட்டுகின்றார். கிறது, வன என்பன முறையே நிகழ்கால, எதிர்கால வடிவங்கள் என்று சுட்டப்படுகின்றன. இந்நெறியைப் பொறுத்தவரையில் ஆசிரியர் நன்னூலையன்றி வீரசோழியத்தையே பின்பற்றுகிறார்.[10]

(ஈ) செந்தமிழ் நடைக்கு இன்றியமையா இயல்புகள் வலியுறுத்தப் படுத்துகின்றன. எழுத்துகளின் இயல்புகளைக்கூறமுனைந்த ஆசிரியர், முதற்பக்கத்திலேயே கிரந்த எழுத்துகளை ஒரு போதும் பயன்படுத்தக் கூடாது என்று எச்சரிக்கின்றார். இன்னும், யகரமுதற் சொற்கள் (யாமம, யாத்திரை) இயாமம், இயாத்திரை என்று முன்னொட்டுப்புணர்த்து எழுதப்படும் என்ற விளக்கமும் இங்குச் சுட்டத்தகும்.

(உ) இன்றியமையா இலக்கண விதிகளை எளிதாகப் பொதுமைப் படுத்தி முனிவர் கூறுகிறார் சான்றாக, நெடிலுக்குப் பின்னர் மெல்லெழுத்தோ இடையெழுத்தோ ஒரு போதும் இரட்டித்தலில்லை[11] என்பதையும் குற்றியலுகரத்தை வரையறுப்பதையும் காட்டலாம். ஒலியளவாலும் இடச்சார்பாலும் ஆகிய நெடிலுக்குப் பின்னர் வரும் வல்லெழுத்தை ஊர்ந்த உகரம் குற்றியலுகரம் எனப்படும் என்று செந்தமிழ் இலக்கணம் வரையறுக்கின்றது. இவ்விளக்கமுறை தமிழ் மொழிக்குப் புதியதாகும் (ஒ. பா.4.4.).

(ஊ) மொழிக் கல்விக்குப் பொருட் புலப்பாடு மிக இன்றியமையாத தாகையால், இந்நூல் பொருள் மயக்கம் அல்லது பொருட் பிழை நேராமையைக் காத்திட அறிவுறுத்துகின்றது. சொற் புணர்ச்சிக்கேற்பப் பொருள் வேறுபடும் எனும் செந்தமிழ் நெறிகள் ஆங்காங்குச் சுட்டிக் காட்டப்படுகின்றன.

அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
யிகழ்வார்ப் பொறுத்த றலை — இக்குறட்பாவின்

இரண்டாம் அடியில் பகரவொற்று மிகுந்தால் 'இகழ்வாரை' (slanderer)என்றும்மிகாதேல் 'இகழ்வார்'. (slanderers themselves) என்றும் பொருள்படும் என்று ஆசிரியர் விளக்கம் தருகிறார்.

தொன்னூல் விளக்கம்

(அ) தொன்னூல் விளக்கம் தமிழ் மொழியை அறிந்தோர் பயிலும் வகையில் இயற்றப்பட்ட மரபிலக்கண நூலாகும். ஆசிரியர் பாயிரத்தில் குறிப்பிட்டவாறு, முந்தைப் பல இலக்கண நூல்களின்செய்திகளைச் சுருக்கி விவரிக்கும விளக்க முறை நூலாகும். மரபுகளைப் பேணுதல் எனும் அவாவினால், தம் காலத்தைய மொழியியல்புகளை ஆசிரியர் பெரிதும் கருத்திற் கொள்ளவில்லை. இவ்வியல்பும் தமிழிலுள்ள ஏனைய இலக்கண நூல்களை ஒட்டியதுதான் நன்னூல், வீரசோழியம், யாப்பருங்கலக்காரிகை, தண்டியலங் காரம, வெண்பாப்பாட்டியல் விருத்தப்பாட்டியல் ஆகிய நூல்களின் கருத்துகள் தொன்னூல் விளக்கத்திற்குப் பெரிதும் முதற் பொருளாக (மூலதனமாக) அமைந்துள்ளன.

(ஆ) உரையின் அமைப்பும் செய்திகளும் முந்தை இலக்கண உரையாசிரியர்களை நினைவூட்டுகின்றன. நூற்பாவின் கருத்துக்கு விளக்கமாக உரை உளது. முந்தைய இலக்கண நூற்கருத்துகள். இலக்கியப் பாடல்கள் போல்வன மிகுதியாகச் சான்று காட்டப் பட்டுள்ளன. இவ்வகையில் உரை ஓர் ஒப்பாய்வாகவும் அமைந் துளது. அன்றியும், முந்தைய இலக்கண ஆசிரியர்களின் கருத்துக்கு வேறான கருத்தினைக் கூறுமிடங்களில் அறிவியலார்ந்த திறனாய்வு நடையினையும் காணமுடிகின்றது. வினைக்குறிப்பு அல்லது குறிப்பு வினை என்று முந்தைய இலக்கண நூல்களில் குறிக்கப்பட்டுள்ள சொற்களைத் தொன்னூல் விளக்கம் அமைப்பில் பெயர்ச் சொற் களே[12] என ஆராயுமிடம் இதற்குச் சான்றாகும்.

> வினைச்சொல்லல்ல வாயினும் வினையைப் போல
> நடந்து குறிப்பினால் வினையின் தொழிலைக்காட்டும்
> வினைக் குறிப்பு (உரை 103)

மொத்தத்தில், செந்தமிழ் இலக்கணத்தில் ஆய்வு மனமும் தொன்னூல் விளக்கத்தில் மரபைப் பேணி இலக்கணம் எழுதுதல் எனும் சாதனை அவாவும் மேலோங்கி நிற்கின்றன எனலாம்,

4. கருத்துவேறுபாடு

வெவ்வேறு நோக்கத்தினையும் வெவ்வேறு அணுகுமுறையினையும் கொண்டமையால் ஆசிரியர் ஒருவரேயாயினும், நூல்கள் இரண்டிலும் குறிப்பிட்ட செய்திகளை விவரிப்பதில் வேறுபட்ட கருத்துக்கள் காணப்படுகின்றன. அவற்றுட் சில :

1. செந்தமிழ் இலக்கணம் ஆய்த எழுத்தை ஒரு கிரந்த எழுத்து என்று கூறுகிறது. இவ்வெழுத்து ஓர் அடித்தொண்டை ஒலி (deep gutteral sound) ; ஆங்கில எழுத்து g-ஐ ஒத்தது இது தனக்கு முன்னுள்ள குறிலை நெடிலாக மாற்றும் இயல்பு டையது. இது ஒரு மெய்யெழுத்தாகும். இவ்வாறு விளக்கும் ஆசிரியர் பின்வரும் சான்றினைக் காட்டுகின்றார்.

அன்பின் வழிய துயிர்நிலை யஃதில்லார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு.

ஆய்த எழுத்தை மெய்யெழுத்தினின்றும் வேறுபட்ட, சார் பெழுத்தாகத் தொன்னூல் விளக்கம் விவரிக்கிறது.

செந்தமிழ் இலக்கணத்தில் காட்டபபட்ட குறளில் ஆய்தம் யகரக் குறிலை நெட்டோசையாக மாற்றியதால் யாப்பிலக்கணம் பிழைபடவில்லை என்பது முனிவர் கருத்து. ஆனால் முந்தை இலக்கண நூல்களின் கருத்திற்கிணங்கி[3] ஆய்தம் இங்கு மெய்யெழுத் தைப்போன்று அசைமுடியாகச் செயற்பட்டு யாப்பமைதியைத் தரு கின்றது என்று கொள்வதே ஏற்புடையது. ஆய்தத்தைக் கிரந்த எழுத்தாகிய விசர்க்கத்தோடு இயைபுபடுத்தியமையே, அதற்கு நெடில் எனும் ஒலியைக் கற்பிக்கக் காரணமாயிற்று. தமிழாய்த மும் வடமொழிகளின் விசர்க்கமும் வெவ்வேறான இயல்புடையன. ஆய்தம் தனிக்குறிலுக்கும் வல்லொலிக்கும் இடையில் வரும்; வல்லொலியின் வெடிப்போசையை உரசொலியாக மாற்றும். ஆனால் விசர்க்கம் குறில் அல்லது நெடிலின் ஈற்றில் வந்து, அவற்றின் ஒலியளவை நீட்டவல்லது.

2. யமன் யானை, யாமம் போன்ற யகர முதற்சொற் கள் இகர முன்னொட்டினை ஏற்று இயமன், இயானை, இயாமம் என்று எழுதப்படும்; இவ்விதம் அரைமாத்திரைஅளவை உடையது குற்றியலிகரம் எனப்படும் - இது செந்தமிழ் இலக்கண விளக்கம்.

யம்முத லிய்யா மிறுகுற ளுக்கெடி
லஃகு மற்றா மசைச்சொல் மியாவே - இது

தொன்னூல் விளக்கம் (14) தரும் குற்றியலிகர விளக்கம்.

தொன்னூல் விளக்கத்தில் மரபை வழிமொழியும் முனிவர் செந்தமிழ் இலக்கணத்தில் தம் மனத்தை ஆய்வின் வழிச்செலுத்து கின்றார். எனினும் இந்த ஆய்வு முடிவு ஏற்புடைத்தாக இல்லை.

யகரமுதல் வடமொழிச்சொற்களுக்கு இகரமொட்டு இணைக்கும் இயல்பினை யானை முதலிய தமிழ்ச்சொற்களுக்கும் முனிவர் பொருத்துகின்றார். பிற மெய்யெழுத்துகளோடு யகரம் சேருங்கால் உண்டாகும் விட்டிசையைத் தடுத்து ஒருங்கிணைக்கும் இகரவொலியினையே தமிழ் இலக்கண நூல்கள் குற்றியலிகரம் என்று கூறுகின்றன.[13] ஆனால் முனிவரோ பிறமொழி உணர்ந்தமையால், வேறுபட்ட கருத்தினைச் செந்தமிழ் இலக்கணத்தில் கூறுகின்றார்.

3. செந்தமிழ் இலக்கணம் சொற்களின் நடுவிலும் ஈற்றிலும் குறுகி, ஒன்றரை மாத்திரையாக ஐகாரக் குறுக்கம் என்று கூறுகிறது. ஆனால் தொன்னூல் விளக்கம் ஐகாரக் குறுக்கம் சொல்லின் மூவிடத்தும் வரும் என்றும ஒரு மாத்திரை அதன் ஒலியளவு என்றும் கூறுகிறது.[14]

> ஐத்தனித் தளபெடுத் தன்றிமூ விடத்து
> மௌவு முதலிடத்து மஃகு மென்ப (16)

தலைவன், தவளை போன்ற சொற்கள் பேச்சு மொழியில் தலவெங், தவளெ என்று ஒலித்தலைக் கருத்திற் கொண்டு, முனிவர் சொற்களின் நடுவிலும ஈற்றிலும் ஐகாரம் குறுக்கும் என்று கூறுகின்றார். (ஐந்து ஐப்பசி போன்றவற்றிலுள்ள ஐகாரத்திற்கும் தலைவன், தவளை போன்றவற்றிலுள்ள ஐகாரத்திற்கும் ஒலிப்பில் வேறுபாட்டினை முனிவர் உணர்ந்திருக்கின்றனர்)

4. கருத்தளவில் மட்டுமின்றி. ஒரே கருத்தினை விளக்கும் விதத்திலும் இரு நூல்களுக்குமிடையே வேறுபாடு காணப்படுகிறது. குற்றியலுகரத்தை விளக்குமிடத்து இதனைத் தெளிவாகக் காணலாம்.செநதமிழ் இலக்கணம் ஒலியளவாலும் இடச்சார்பாலும் ஆகிய நெடிலுக்குப் பின்னர் வரும் வல்லெழுத்தை ஊர்ந்த உகரம குற்றியலுகரமாகும் என்று கூறுகிறது[15]

> தனிக்குறி லல்லவற் றிறுதி வன்மை
> யூர்ந்துழிக் குறுகு முகர மென்ப (15)

ஆடு. நாடு என்பவற்றிலுள்ள நெடிய ஒலியளவாலாகிய நெடில் என்னும் கற்பு கழுகு என்பவற்றிலுள்ள 'கற்', 'கழு' ஆகியவற்றை இடச்சார்பாலாகிய நெடில் என்றும் செந்தமிழ் இலக்கணம் கூறுகிறது ஒரு மாத்திரைக்கு மேற்பட்டமையால் கற் கழு, போல் என்பவற்றை நெடில் என்று ஆசிரியர் கருதுகிறார்

கற்பு, கழுகு, புகர், புகழ், விரல் போன்ற தொடர் மொழிச் சொற்களை நெடில் இயல்புடையன என்று கூறும் கோட்பாடு தொல்காப்பியர், இளம்பூரணர் போன்ற முந்தை மரபிலக்கண ஆசிரியர்களிடமும் காணப்படுகிறது.[16]

5. இரு நூல்களும் வேறுபடுமிடங்களில் குறள் வெண்பாக்கருத்தும் குறிக்கத் தகுந்தது. முதலடி நான்கு சீர்களும் இரண்டாமடி மூன்று சீர்களுமாக அமைவது குறள் வெண்பா என்று கூறும் செந்தமிழ் இலக்கணம். இச்சீர் வரையறைமாறி அமைதலும் உண்டு என் பதற்குப் பின்காணும் திருக்குறட்பாக்களை எடுத்துக்காட்டுகிறது.

மனத்துக்கண் மாசில னாத
லனைத்தற னாகுல நீர பிற
மனத்தானா மாந்தரக் குணர்ச்சி
யினத்தானா மின்னா னெனப்படுஞ் சொல்

தொன்னூல் விளக்கத்தில் முந்தை யாப்பு நூல்களின் செய்திக்கு மாறுபட்ட கருத்து இடம்பெறவில்லை.

மேற்கண்ட இரு குறளையும் எதுகை இடையின் பொருட்டு முனிவரே மாற்றியமைத்துள்ளார் எனல் இயலாது. மோனை, எதுகை இயைபின்றிக் குறட்பா அமைதலும் உண்டு என்று அவரே அந்நூற்கண் குறிப்பிட்டுள்ளார்.

முடிவுரை

செந்தமிழ் இலக்கணமும் தொன்னூல் விளக்கமும் வீரமா முனிவரால் கிறித்தவச் சமய உணர்வோடு இயற்றப்பட்டவை. செந்தமிழ் இலக்கணம் அயல்மொழியாளர் தமிழைக் கற்க உதவு மாறு எழுதப்பட்டது. தொன்னூல் விளக்கம் தமிழ் அறிந்தவர்க்குப் பயன்படுமாறு, தம புலமையைத் தமிழறிஞர்க்கு வெளிப்படுத்து மாறு இயற்றப்பட்டது. முன்னதில் கற்பிக்கும் ஆய்வு நோக்கும் பின்னதில் இயற்றவேண்டும் எனும் அவாவும் ஆசிரியர்க்கு ஊக்க மளித்தன. ஏனைய சமயத்தவரால் இலக்கணம் இயற்றப்பட்டமை போன்று கிறித்தவராலும் இலக்கணம் இயற்றப்பட்டது எனும் பெருமையை முனிவர் நிறுத்தினார். தம்மைத் தமிழினம் குறிப்பாக, தமிழ்ப் புலவர்கள் ஒரு தமிழ்ப் புலவராக மதிக்க வேண்டும் எனும்

அவரவை இலக்கணம், இலக்கியம், போன்ற பல்வேறு துறைப் படைப்புகளை அவர் இயற்றியதன்வழி நிறைவாக்கினார்; தமிழ் முனிவரானார்.

குறிப்புகள்

1. மது. ச. விமலானந்தம். ப. 426
2. செந்தமிழ் இலக்கணம் முன்னுரை
3. 'இச்செய்தி கொடுந்தமிழில் இலக்கணத்தில் ஏற்கெனவே கூறப்பட்டுள்ளது. அதில் கூறப்படாத சில இங்கு விவரிக் கப்படுகின்றன' என்பது போன்ற கூற்றைச் செந்தமிழ் இலக்கணத்தில் ஆங்காங்கே காணலாம்.
4. நன்னூல் இயற்றப்பட்ட போது ஐந்திலக்கணங்கள் அதில் இருந்தன என்பதை அதன் பாயிரம் குறிப்பிடுகின்றது.
5. இந்நூல் தொல்காப்பியம் போன்று எழுத்து, சொல், பொருள் எனும் மூன்று அதிகாரங்களை மட்டுமே உடையது. பொரு ளதிகாரத்தில் பொருள், யாப்பு, அணி, பாட்டியல் ஆகிய இலக்கணங்கள் அடங்கியுள்ளன.
6. தொன்னூல் விளக்கம் இலக்கண விளக்கத்தைப் போன்று பாட்டியலையும் விவரிக்கின்றது. இப்பாட்டியல் செய்யுள் மரபியல் என்ற பெயருடன் யாப்பதிகாரத்தில் உளது.
7. வீரசோழியம் உள்ளிட்ட இலக்கண நூல்கள் யாவும் குறிப் பிட்ட ஒரு சமயத்தாரால் எழுதப்பட்டவையே. நன்னூல் இலக்கண விளக்கம் சுவாமிநாதம் ஆகியவை எழுத்திற்கு வரையறை கூறுமிடத்துத் தத்தம் சமயக்கோட்பாட்டினைப் புலப்படுத்தியுள்ளன.
8. இப்பகுதிச் செய்திகள் நன்னூலின் சுருக்கமே என்று ஆசி ரியர் குறிப்பிடுகின்றார். எனினும் நன்னூற்கு மாறான செய்திகள் சிலவும் ஆங்காங்கு இடம் பெற்றுள்ளன.
9. எழுத்திலக்கணத்தை ஓரியலில் விவரித்தலை வீரசோழியம், நேமிநாதத்திலும் காணலாம்.

10. வீரசோழியம் தமிழ், வடமொழி இரண்டின் அமைப்பையும் ஒப்பிட்டு விளக்கும் நூல். இது அயல் மொழியாளருக்குப் பயன்படுமாறு அமைந்துளது.

11. நெடிலுக்குப் பின்னர் மெல்லெழுத்து இரட்டித்தலாக 'யாங்ஙனம்' எனும் சொல் சங்க இலக்கியத்தில் காணப் படுகிறது. இவ்வியல்பு மிக அருகியதாகையால், முனிவர் இதனைப் பொருட்படுத்தவில்லை.

12, காலவுருபனோ எதிர்மறையுருபனோ வியங்கோள் உருபனோ ஏலாமை, இவற்றின் பகுதி ஏவலொருமையாக அமையாமை போன்ற இயல்புகளால் இச்சொற்கள் உண் மையில் பெயர்களே (பெ, சுயம்பு. 1991,ப.6). செந்தமிழ் இலக்கணம் குறிப்பு வினையைப் பெயர்ச்சொற்களோடு சேர்த்து விளக்குகிறது.

13. குற்றியலுகரத்தோடு யகரம் புணருங்கால் உகரம் மறைந்து. வல்லின மெய்நிற்கிறது.

14, சொல்லின் மூவிடத்தும் குறுகும் என்பதால் உண்மையில் ஐகாரக்குறுக்கம் என்ற ஒன்று இல்லை. மேலும், சொல் லில் இரு மாத்திரை ஒலிக்காமையில் ஐ என்ற நெடிலும் தமிழில் இல்லை என்றாகிறது. இக்கருத்து ஔகாரக்குறுக் கத்திற்கும் ஔகாரத்திற்கும் பொருந்தும். எனவே பத்து உயிர்களே தமிழில் உள்ளன.

15. குறுமையும் நெடுமையும் அன்பிற் கோடலின்
தொடர்மொழி யெல்லாம் நெட்டெழுத் தியல
(தொல்காப்பியம் எழுத்ததிகாரம் 2:1/)

துணை நின்றவை

1. தொன்னூல் விளக்கம். கழக வெளியீடு.
2. செந்தமிழ் இலக்கணம், தஞ்சை சரஸ்வதி மகால் வெளியீடு.
3. மது.ச.விமலானந்தம், தமிழ் இலக்கிய வரலாற்றுக்களஞ்சியம்
4. சுயம்பு பெ.,தொன்னூல் விளக்கம், செந்தமிழ் (85) 1991
5. சுயம்பு பெ, செந்தமிழ் இலக்கணம், மொழியியல் 1988.

வழக்கொழிந்த பழைய கலைச்சொற்கள்

— பேராசிரியர் சா. கிருஷ்ணமூர்த்தி

மொழி மாறுந்தன்மையது. சமூக, பொருளாதார, அரசியல் காரணிகள் இம் மாற்றத்திற்கு அடிப்படையாக அமைவன. இக்காரணிகளோடு அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சியும் மொழியின் மாறும் தன்மையில் இன்று குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளது. எனவே, காலந்தோறும் மொழியின் பல்வேறு கூறுகள் இக்காரணங்களால் பாதிப்பைப் பெறுகின்றன. இப் பல்வேறு கூறுகளுள்ளும் ஒரு மொழியின் சொற்கள் பெரும் பாதிப்பைப் பெறுகின்றன என்பதில் ஐயமில்லை.

இருவகைச் சொற்கள்

பொதுச் சொற்கள், கலைச்சொற்கள் எனும் இரு பிரிவுகளில் அடங்கும் ஒரு மொழியின் சொற்கள் அவற்றின் சொல் வழக்கு, பொருள் வழக்கு எனும் இரு நிலைகளிலும் பாதிப்பைப் பெற்றுள்ளன. சான்றாக,

'குதிரையுள் ஆவினைச் சேவல் என்றலும்' (தொ.பொ.236) என்ற மரபியல் தொடருக்கு உரைகண்ட பேராசிரியர்,

'குதிரையைச் சேவலென்றல் இக்காலத்து அரிதாயிற்று' என்று கூறியிருப்பதைச் சான்றாகக் காட்டலாம். சேவல் எனும் இக்கலைச்சொல் மட்டுமன்றிப் பொதுச் சொல்லாகிய சுட்டுச் சொற்களும் பிறிதொரு காலத்தில் வழக்கொழிந்தமையைக் காண முடிகின்றது. இதர இறுதிச்சுட்டுப் பெயர்களாகிய அதோளி, இதோளி போன்ற சொற்கள் இளம்பூரணர் காலத்திலேயே வழக்கொழிந்த தன்மையை அவர்தம் கூற்றிலிருந்து அறிய முடிகின்றது.

சொல் வழக்கு, பொருள் வழக்கு

சொற்கள் வழக்கொழிதல் என்பதைச் சொல்வழக்கொழிதல், பொருள் வழக்கொழிதல் என இருவகைப்படுத்திக் காணலாம்.

சொல்வழக்கொழிதல் என்பது மேற்கூறப்பட்ட காரணிகளின் அடிப்படையில், அச்சொல் அவ்வழக்கில் இல்லாமற் போதலாகும். தூங்குதல், இறந்து போதல் என்ற பொருளைக் குறிக்கும் துஞ்சுதல் என்ற சொல்லும் தொங்குதல் என்ற பொருளைக் குறிக்கும் தூங்குதல் என்ற சொல்லும் அவ்வழக்குகளில் – அப்பொருளில் பயன்படுத்தப் பெறாமல் ஒழிந்து போனதைச் சான்றுகளாகக் காட்டலாம். ஆயினும் அப்பொருண்மைகள் அழிந்துபடவில்லை; அவை வேறு சொற்களால் சுட்டப்பட்டு வருகின்றன. எனவே சொல்வழக்கு அழிதல் என்பது சொற்கள்வழக்கில் இல்லையாகும் தன்மையைக் குறிப்பவாகும்.

பொருள் வழக்கொழிதலைப் பொறுத்தவரை ஒரு பொருண்மை ஒழிந்து பிறிதொரு பொருண்மையைச் சுட்டத்தலைப் படுவதைக் குறிக்கலாம். இதற்கு 'நாற்றம்' என்ற சொல் முன்பு நறுநாற்றத்தை குறிப்பதினின்றும் ஒழிந்து பின் தீ நாற்றத்தைச் சுட்டுவதைச் சான்றாகக் காட்டலாம். இவ்வாறு சொற்கள் வழக்கொழிந்தும் பொருள் திரிந்தும், மொழியில் இன்றைய நிலையில், காணப்படும் தன்மை ஆராயப்படவேண்டும். சொற்கள் பற்றிய ஆய்வில் எவ்வளவு சொற்கள் இன்று வழக்கொழிந்துள்ளன என்று எடுத்துக்காட்டுவது ஆய்வு நிலையில் இன்று தேவையான ஒன்றாகும். 'வழக்கொழிந்த சொற்களின் அகராதி' என்ற வகையில் ஓர் அகராதியைத் தொகுக்கும் முயற்சியில் ஈடுபடலாம்.

கலைச்சொற்களின் தேவை

கலைச்சொற்களின் தேவை இன்று பேரளவில் அறிஞர் பலரால் உணரப்பட்டு வருகின்றது. தேவைக்கேற்ப தமிழிலக்கியங்களில் காணப்படும் கலைச்சொற்களை எடுத்துப் பயன்படுத்திக் கொள்வதை அறிஞர்கள் வரவேற்கின்றனர். ஆயினும் தேவை என்பதை எப்படி வரையறுப்பது?

1. உரிய கலைச்சொல்லை ஆக்கவியலாதபோது

2. கலைச்சொற்களுள் நுட்ப வேறுபாடுகளை அறுதியிட்டுக் காணும்போது

3. சுருங்கிய நேரிய பொருந்திய கலைச்சொல்லாக இருக்கும்போது

இவை போன்ற சூழல்களில் தமிழிலக்கியங்களில் காணப்படும் சொற்களை இன்றைய கலைச் சொல்லாக்கத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இவ்வாறு நாம் பயன்படுத்தக் கருதும் பொழுது தமிழ் இலக்கியங்களில் காணப்பட்டு இன்று வழக்கொழிந்தும, இன்றும வழக்கில் நிலவியும் வரும் கலைச்சொற்களைப் பகுத்துக் காணுதல் வேண்டும். பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படும் அத்துணைச் சொற்களும் இன்று வழக்கொழிந்து போய்விடவில்லை. பல அரிய சொற்கள் இன்னும வழக்கில், பயன்பாட்டில் மக்களிடையே நிலவு கின்றன. அப்படி வழங்கும் சொற்களுள் சில வடிவவேறுபாட்டுடன் திரிந்து காணப்படுகின்றன. நெய்த்தோர் நெத்துரு என்றும், வாய்ச்சி வாட்ச்சி. என்றும், சகடம் என்றும் வழங்கப்படுவதைச் சுட்டலாம்.

ஆயினும் எவ்விதத் திரிபும் பெறாமல் அப்படியே இன்றும் வழங்கும் சொற்களும் பலவுள. சூடு (புறநா. 14), அரிகால் (புறநா. 33, 322) போன்ற சொற்களையும் பல உயிரியல் கலைச்சொற் களையும் இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். சான்றாகக் குதிரை என்ற சொல்லை எடுத்துக்கொள்வோம் குதிரை என்ற சொல் தொல்காப்பியத்திலேயே பயின்று வந்துள்ளதெனினும் இதனைக் குறிக்கப் புரவி, பரி, இவுளி மா, மான் போன்ற சொற்களும் ஆட்சியிலிருந்துள்ளன. இச் சொற்களுள் இன்றுவரை பெருகிய பயன்பாட்டிலும சொல் விரிவாக்கத்திலும் குதிரை என்ற சொல்லே இருந்துவருகின்றது. குதிரை முகம் என்பது முழந்தா ளெலும்பையும் (tibia). குதிரை வலி என்பது பிள்ளைபெறும் பெண்ணின் பேறுகால வலியையும் (excessive labour pain) குறிப்பதிலிருந்து இச்சொல்லின் விரிவாக்க நிலையை நாம் உணர முடியும். ஏனைய புரவி, பரி, இவுளி, மா, மான் போன்ற சொற்கள் ஒவ்வொன்றும் குதிரையென்ற ஒரே பொருளை உணர்த்துவனவாக இருந்தும் அச்சொற்கள் பயன்பாட்டினின்றும் இன்று மறைந்து போயிருக்கின்றன. இதற்குக் காரணம் இச்சொற்கள் உலக வழக்கில் அரிதாகி இலக்கிய வழக்கில் பெரிதாகி நிலவியதே காரணமாக இருக்கமுடியும். ஒரு பொருளைக் குறிக்கும் பல சொற்கள் இருக்கும் நிலையில், அச்சொற்களுள் நுட்பப் பொருண்மை வேறுபாடுகள் இல்லையெனில் அவை உலக வழக்கில் வழக்கற்றுப் போதல் இயற்கையே. எனவே கலைச் சொல்லைப் பொறுத்தவரை தொடர்

புடைய துறையில் ஒரு சொல் ஒரு பொருண்மையைக் குறிப்பதாக அமையவேண்டுமென்பதால், அப்படிப்பட்ட சொல்லே சரியான கலைச்சொல்லாகும் எனலாம்.

வழக்கொழிந்த கலைச்சொற்கள்

தமிழ் இலக்கியங்களுள் காணப்பெறும் பல கலைச்சொற்கள் இன்று சொல் நிலையில் வழக்கொழிந்துள்ளன. சான்றிற்குப் புறநானூற்றில் பயின்று வந்த சில சொற்களைக் காணலாம.

புலா - கோழியின் வாயிலுள்ள தசை

'பேடை ... ... புலாவிட்டரற்று' (326)

புகவு - உணவு

'பழஞ்சோற்றுப் புகவருந்தி' (395)

செற்றை – சிறுதூறு (bush)

'சிறையும் செற்றையும்' (326)

பார்வை (மிருகம்) - காட்டு மிருகங்களைப் பிடித்தற்குப் பழக்கிய விலங்கு (Animal used as decoy)

பார்வை மடப்பிணை (320)

பீள் - சூல், கதிர் (Tender eors of corn)

கருந்தாள்போகி ... பீள்விரிந்து (12)

வரகின் ... பீள் ஒளிக்கும் (321)

உறை - மழைத்துளி (Drop of rain)

தன்பெயல் உறை (302)

பூவல் - செம்மண் (Red earth)

பூவல்படுவில் கூவல் தோண்டி (311)

அயறு - புண்வழலை (Excrescence resulting from a lore)

அயறு சோரும் இருஞ்செவ்விய (22)

ஆம்பி - காளான் (mushroom)

கோடுயர் அடுப்பின் ஆம்பி பூப்ப (164)

இவை போன்ற பல கலைச்சொற்கள் இன்று சொல்நிலையில் வழக்கொழிந்துள்ளன. ஆயினும் இவற்றின் பொருள் வழக்கு

ஒழியவில்லை. இவற்றை இன்றைய நடைமுறையில் எங்கும் பயன்படுவதாகவும் அறியவியலவில்லை. மேற்காட்டப்பெற்ற கலைச்சொற்கள் அனைத்தும் அரிய கலைச்சொற்களாக முன்னர் ஆளப்பட்டிருக்கவேண்டும். இச்சொற்கள் தாவரவியல், விலங்கியல் மண்ணியல். மருத்துவவியல் போன்ற துறைகளுக்குரியனவாக இருப்பதால் இவற்றை இத்துறைகளுக்குரிய கலைச்சொற்களாகக் கருதலாம்.

இச்சொற்களை இன்றைய பண்பாட்டிற்குக் கொண்டு வருதல் குறித்து அந்தந்தத் துறையைச் சார்ந்த துறை வல்லுநர்களால் தான் முடிவு செய்ய இயலும், இத்தகு அரிய சொற்கள் வழக்கொழிந்ததற்குக் கீழ்க்காணும் காரணங்களைக் கூறலாம்.

1. அச்சொல் குறிக்கும் பொருண்மையைச் சுட்ட வேறு சொல்லை உருவாக்குதல்
2. விளக்கம் வேண்டிக் கூட்டுச்சொல்லை ஆக்கிக் கொள்ளுதல்
3. மொழி எளிமை வேண்டுதல்
4. நடைமுறை வழக்கத்திலுள்ள சொற்களை ஏற்றுக் கொள்ளுதல்
5. சொற்களின் புரிதிறன் அவ்வக்காலங்களில் குறைதல்

இக்காரணங்களையும் இவை போன்ற பிற காரணங்களையும் அடிப்படையாகக் கொண்டு இலக்கியங்களில் காணப்படும் பழஞ்சொற்களை ஆராய்தல் வேண்டும். இவ்வாறு ஆராய்தலின் மூலம் இவற்றின் சொற்பண்பை அறிந்து கொள்வதோடு, அவற்றை இன்றைய பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் பற்றியும் முடிவு செய்யவியலும்.

மறந்துபோன தமிழ் எழுத்துக் குறியீட்டுப் பெயர்கள்

—பேரறிஞர் என். சௌந்தரபாண்டியன்

தமிழ் நெடுங்கணக்கில் பல்வேறு குறியீடுகள் உள. அவற்றில் மிகச் சிலவற்றுக்கே பெயர்கள் இதுகாறும் தமிழ் உலகில் கூறப்பட்டு வருகின்றன.

எடுத்துக்காட்டாக, ா - இந்தக் குறியீட்டைக் 'கால்' என்று கூறுவார்கள். கி - இதில், க மீதுள்ள குறியை விலங்கு அல்லது மேல்விலங்கு என்பார்கள். ெ - இந்த குறியீட்டை, ஒற்றைக் கொம்பு என்று கூறுவது உண்டு. னே - மீதுள்ள குறியைச் சிலர் மேற்கொம்பு என்பார்கள்; சிலர் மேற்சுழி என்பர்.

மீதிக் குறியீடுகள்? அவைபற்றி யாருமே இதுவரை சிந்திக்கவில்லை.

ள : இந்தப் குறியீட்டைக் குறிப்போர். 'ளானா மாதிரி எழுது என்று கூறுவார்கள். நூலில் எழுதுவதானால், 'ள-இக் குறியீடு' என்று குறிப்பர். அதே போன்று, ை, ே, முதலிய பல்வேறு குறிகளுக்கும் அவ்வாறே கூறி வருகிறார்கள்.

தமிழ் எழுத்துக்களில் உள்ள எல்லாக் குறியீடுகளுக்கும் திட்டவட்டமான பெயர்கள் இப்போது கூறப்படாவிடிலும், இப் போது அறியப் படாவிட்டாலும் முன்பு எப்போதாவது இருந்த துண்டா? உண்டு.

தொல்காப்பியம், நன்னூல் போன்ற இலக்கண நூற்களில் தமிழ்க் குறியீடுகளின் பெயர்கள் கூறப்படவில்லை. அவற்றில் குறியீட்டுப் பெயர்கள் கூறப்பட்டிருந்தால், இன்றுதமிழ் மக்களுக் குக் குறியீடுகளின் பெயர்கள் தெரிந்திருக்கும் என்று கருதலாம்.

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் உள்ள சுவடி களைஆய்ந்து கொண்டிருந்த போது ஓர் ஓலைச்சுவடியில் (அரசினர்

கீ, சு, நூ, கு. எண் ஆர். 777 அ), காணக் கிடைக்காத தமிழ் எழுத்துக்களுக்கான குறியீடுகளுக்கெல்லாம் பெயர்கள் எழுத்தாணியால் பொறிக்கப்பட்டிருந்தன! நான் அப்போது அடைந்த ஆனந்தத்திற்கு அளவே இல்லை! அதில் கண்டிருந்த குறியீட்டுப் பெயர்கள் இதுவரை தமிழ் உலகு அறியாதவை!

அச்சுவடியிலிருந்து பெயர்களைக் கீழ்வருமாறு எழுதலாம் :-

குறியீட்டுக்கான பெயர்	குறியீடு எழுத்தில் வரும் முறை
கீழ்ப்பிறை	னா
மேல்விலங்கு	கி
கீழ்விலங்கு	கு
சுழிமேல் விலங்கு	கீ
இறங்குகீற்று	சு
மடக்கேறுகீற்று	ஞு
மடக்கேறு கீற்றுக்கால்	ஞூ
இறங்கு கீற்றுக் கீழ் விலங்கு	சூ
பின்வளை தலைக்கீற்று	கூ
முன்கோடு	கெ
முன் சுழிக்கோடு	கே
முன்னிணைக்கோடு	கை
முன்வளை தலைக்கீற்று	ணை
முன்கோடு பின்கால்	கொ
முன்கோடு கீழ்ப்பிறை	னொ
முன் சுழிக்கோடு பின்கால்	கோ
முன் சுழிக்கோடு கீழ்ப்பிறை	னோ
கோட்டுக்கால்	ஔ
முன்கோடு பின்கோட்டுக்கால்	கௌ

இவற்றில், கோடு என்று வரும் இடத்தை நாம் கொம்பு என்றும் அழைக்கலாம்.

சென்னைப் பல்கலைக்கழகம் 1928-இல் வெளியிட்ட லெக்சிகனில், ெ, ே - என்ற இரு குறியீடுகளுமே 'கோடு' என்று ஒரே சொல்லால் குறிக்கப்பட்டிருப்பது (தொகு - II-IV பக்.1180)சிறிது திருத்தத்திற்குரியது என்பது தற்போதைய சுவடி ஆய்வால் விளங்குகிறது. மேலும், அதே தொகுதி லெக்சிகனில் கொம்புக்கால் என்றால், கா. கோ ஆகியவற்றிலுள்ள கொம்பும் காலும் என்று பொருள் தரப்பட்டுள்ளது. ஆனால், சுவடி கூறுவது, கொம்புக்கால் என்றால், ள-என்று குறியை ஆகும். இங்கும் சுவடி குறிப்பிடுவதே சரி எனலாம். ள-இதில், முற்பகுதியில் கொம்பும் (ெ),பிற்பகுதியில் காலும் (ா) இணைந்திருக்கக் காண லாம்.

மேலைக் குறியீடுகளில் கீழ்ப்பிறை, இறங்கு கீற்று, இறங்கு கீற்றுக் கீழ்விலங்கு என்று மூன்று பெயர்கள் மட்டுமே சரியாக இ. மா.கோபாலகிருஷ்ணனார் தொகுத்த மதுரைத் தமிழ்ப் பேரக ராதியில் காணப்படுகின்றன என்பதும் இங்கு அறியத்தக்கது. இம் மதுரை அகராதியும் கொம்புக்கால் என்பதற்கு லெக்சிகன் அளித்துள்ள அத் தவறான பொருளையே தருகிறது.

இதனால், அகராதிகளில் காணலாகும் மிகக் குறைவான குறியீட்டுப் பெயர்களும், அவற்றில் இருக்கும் தவறுகளும் துலங்குகின்றன.

குறியீடுகளுக்குப் பெயர்கள் இருந்தும் தமிழர் ஏன் அவற்றை மறந்தனர்? அதற்கு இரு காரணங்களைச் சிந்திக்கலாம்.

1. பழங்காலக் தமிழ்க் கல்வி முறை

2. குறியீடுகளைக் கற்றுத் தருவதில் உள்ள சிக்கல்.

1. அந் நாட்களில் ஓர் ஊரில் ஒரு வித்துவான் இருப்பார். அவரிடம் போனால்தான் அந்தக் கலம்பகம் பற்றிப் பாடம் கேட்கலாம் என்ற நிலை இருந்தது. அவரிடம் போய், அவர் விருப்பப்பட்டுச் சேர்த்துக் கொண்டால், மாணவராக இருந்து கற்க வேண்டும். அவர்ஒரு நாளைக்கு ஒரு பாடம் சொல்லித் தருவார். அதையே நான்கு நாளைக்கு வைத்துக்கொள்வார். அவரிடம் இவ்வாறு துன்பப்பட்டுக் கற்றுக்கொண்ட ஒருவர், எளிதில் பிறருக்குத்தான் கற்றதைச் சொல்லிதரமாட்டார்; இடர் தருகின்ற

பழங்காலத்தில் இத்தகைய கல்விமுறையால்தான் பண்டு இருந்த குறியீட்டுப் பெயர்கள் பின் சந்ததியினர்க்கு வராமலேயே போயிருக்க வேண்டும்.

மருத்துவம், வர்மம், போன்ற எண்ணற்ற கலைகள் மேற்குறித்த கல்வி முறையால் தற்போதைய தமிழ்ப் பரம்பரைக்குக் கிட்டாது ஒழிந்தன என்றும் கூறலாம்.

2. எழுத்துக்களைச் சிறுவர்களுக்குச் கற்றுத்தரும்போது, குறியீடுகளுக்கான பெயர்களைக் கற்றுத்தரும் போது, குறியீடுகளுக்கான பெயர்களைக் கற்றுத்தருவது, எழுத்தையே சரியாக எழுதத் தெரியாத சிறுவனிடம் 'கொம்புக்கோடு போடு' என்றால், அவன் என்ன செய்வான்? அதனால், 'ஈானா மாதிரி எழுது', இந்தா இப்படி என்று கையசைத்துக் கற்றுத்தரத் தலைப்பட்டனர். எழுத்துக்களைக் கற்றுக் கொண்ட பிறகு, குறியீடுகளுக்கான பெயர்களைப் பற்றி யாரும் கவலைப்படாது போயினர்.

இனிமேல் உலகெங்கும் உள்ள தமிழ் ஆய்வாளர்களும், மாணவர்களும், சிறார்களும் தமிழ் எழுத்து. வரிவடிவங்களில் உள்ள சிறு கீறலுக்குக்கூடச் சிறப்பாகய் பெயர் இருப்பதை அறிந்து பயன்படுத்தலாம். 'இந்த மாதிரி', 'அந்த மாதிரி' என்று விரலைச் சுழற்றிக் கூறாது, தமிழ் எழுத்து நாகரிகம காப்போமாக!

பொன்மொழிகள்

சிலப்பதிகாரம்

பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்
தெய்வம் தெளிமின்; தெளிந்தோர்ப் பேணுமின்
பொய்யுரை அஞ்சுமின்; புறஞ்சொல் போற்றுமின்
ஊன்ஊண் துறமின்; உயிர்க்கொலை நீங்குமின்
தானம் செய்ம்மின்; தவம்பல தாங்குமின்;
செய்ந்நன்றி கொல்லன்மின்; தீநட்பு இகழ்மின்
பொய்க்கரி போகன்மின்; பொருள் மொழி நீங்கன்மின்
அறவோர் அவைக்களம் அகலாது அணுகுமின்
பிறவோர் அவைக்களம் பிழைத்துப் பெயர்மின்
பிறர்மனை அஞ்சுமின்; பிழை உயிர் ஓம்புமின்
அறமனை காமின்; அல்லவை கடிமின்
கள்ளும் களவும் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின்

— இளங்கோவடிகள்

திருப்பதி பிரிண்டர்ஸ் ○ மதுரை